தமிழரசு

Tamilarasu

(Monthly)

அக்டோபர் 2024 (October 2024)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 55
இதழ் (Issue) : 4

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து,
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து...

Guidance TamilNadu

TAMIL NADU

INVESTORS' FIRST PORT OF CALL

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

04.09.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், ஆப்டம் இன்சைட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு.ரோஜர் கானர் அவர்களை சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம் புரட்டாசி - ஐப்பசி
அக்டோபர் 2024

மலர் : 55 விலை ரூ.30 இதழ் : 04

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

பிழைதிருத்தம் மேற்கொள்பவர்
த. ஷேக்முகமது

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வழி வடிவமைப்பாளர்கள்
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்று மடி. (குறள்- 371)

ஆக்கத்திற்கான இயற்கை நிலை சோர்வு தலைகாட்டாத ஊக்கத்தைக் கொடுக்கும். ஊக்கத்தின் அழிவுக்கான இயற்கை நிலை சோம்பலை ஏற்படுத்தும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ அமெரிக்கா சென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.7,616 கோடி முதலீட்டில் 19 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 4

★ தமிழ்நாட்டின் நலன் காக்க பல்வேறு கோரிக்கைகள் 33

★ மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சராக திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நியமனம் 38

★ இராணிப்பேட்டையில் ரூ.9,000 கோடி முதலீட்டில் வாகன உற்பத்தி ஆலை 41

★ சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.35 ஆயிரம் கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு 47

★ தெற்காசியாவில் முதன் முறையாகச் சென்னையில் ஃபார்முலா 4 கார் பந்தயம் 51

★ முதலாம் இராஜேந்திரன் சோழனின் 'கங்கை கொண்ட சோழன்' – காசு 60

★ வேலை வாய்ப்பு அலுவலகமும் அதன் செயல்பாடுகளும் 65

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் 67

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்- வினா விடைத்தாள் 73

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை
28.09.2024 அன்று முகாம் அலுவலகத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

1 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை ஈட்டும் இலக்கை அடைய அமெரிக்கா சென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

ரூ.7,616 கோடி முதலீட்டில் 19 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 31.08.2024 அன்று அமெரிக்க நாட்டின் சான்பிரான்சிஸ்கோவில், ஓமியம் நிறுவனத்துடன் எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குவதோடு, 39,000-க்கும் மேலான தொழிற்சாலைகள், 2.6 மில்லியன் அளவிற்குத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் என இந்திய அளவில் முதலிடம் வகிக்கும் மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு வளர்ச்சி மையங்கள் மாநிலம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு, மனிதவளங்கள், திறன்களை முன்வைத்து வளர்ச்சியை மேற்கொண்டு வரும் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இத்தகைய சிறப்புகளை கொண்ட தமிழ்நாட்டில், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடன் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, சான்பிரான்சிஸ்கோவில் 29.08.2024 அன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர், அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் ரூ.900 கோடி முதலீட்டில் சென்னை, கோவை, மதுரையில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனையடுத்து 30.08.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் உயர் அலுவலர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 31.08.2024 அன்று சான்பிரான்சிஸ்கோவில், ஓமியம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம்:

ஓமியம் நிறுவனம், பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, அளவிடக்கூடிய புரோட்டான் பரிமாற்ற சவ்வு (Proton Exchange Membrane) எலக்ட்ரோலைசர் அமைப்புகளை வடிவமைத்து, உற்பத்தி செய்கிறது. ஓமியம் நிறுவனமானது அமெரிக்கா, மெக்சிகோ, ஐரோப்பா, ஆசியா முழுவதும் உலகளாவிய பசுமை ஹைட்ரஜன் திட்டக் குழாய்களை அமைத்துள்ளது.

ஓமியம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஓமியம் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

அனைவருக்கும் எனது மாலை வணக்கம்!

முதலில் நானும் எனது துணைவியாரும் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்தபோது, பறைஇசையுடனும், திருக்குறள் பாடல்களுடனும் வரவேற்பு வழங்கியமைக்காக என் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சான் பிரான்சிஸ்கோ என்ற ஊரில் இருக்கிறேனா, சென்னையில் இருக்கிறேனா என்று சந்தேகப்படுகிற அளவிற்கு, தமிழ்நாட்டில் இருக்கிற உணர்வையே எனக்கு நீங்கள் இப்போது ஏற்படுத்திவிட்டீர்கள். இப்படிப்பட்ட அன்பான வரவேற்பு – சந்திப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கிற இந்தியத் துணைத் தூதர் திரு. ஸ்ரீகர் ரெட்டி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எப்போதும் சிரித்த முகத்தோடு – அன்பான வார்த்தைகளையே பேசுகிறவராக இந்தியத் துணைத் தூதர் திரு.ஸ்ரீகர் ரெட்டி அவர்கள் இருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்தியர்களை ஈர்க்கும் நாடு

உலகின் மூன்றாவது பெரிய நாட்டிற்கு நான் வந்திருக்கிறேன். 1971-ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அவரது மகனான நானும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற தகுதியோடு இப்போது வந்திருக்கிறேன். உலகின் மதிப்பு மிக்க அமெரிக்க நாட்டில் வாழுகின்ற இந்திய வம்சாவளி மக்களான உங்களைப் பார்க்கும்போது எனக்குப் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. இத்தனை இந்திய முகங்களை இங்கே பார்க்கும்போது இந்தியாவில் ஏதோ ஒரு மாநிலத்தில் இருக்கிற மாதிரிதான் எனக்கு இருக்கிறது. அமெரிக்காவில் இருக்கிறேன் என்று தோன்றவில்லை. உலகத்தில் எந்த நாடாக இருந்தாலும் – அது இந்தியர் இல்லாத நாடாக இருக்காது. இந்தியர்கள் வாழுகிற நாடாகத்தான் உலகின் எல்லா நாடுகளும் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, அமெரிக்கா என்பது இந்தியர்களை ஈர்க்கிற நாடாக எப்போதுமே இருந்திருக்கிறது.

நியூயார்க், நியூஜெர்சி, வாசிங்டன், சான் பிரான்சிஸ்கோ, சிகாகோ, லாஸ் ஏஞ்சல்ஸ், பால்ட்டிமோர், பாஸ்டன், டாலஸ், ஹியூஸ்டன், பிலடெல்ஃபியா, அட்லாண்டா இப்படி அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நீங்கள் வசித்து வருகிறீர்கள். சில பேரை நான் குறிப்பிட மறந்திருக்கலாம். இப்படிப் பரந்து விரிந்த அமெரிக்கா முழுமைக்கும் தமிழர்கள் பரந்து இருக்கிறார்கள். பல்வேறு மொழிகளைச் சேர்ந்த இந்திய இன மக்கள் இருக்கின்றீர்கள். பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் இங்கு இருக்கின்றீர்கள். தொழில் முதலீடுகளை ஈர்க்க நான் வந்திருந்தாலும், என் இனிய இந்திய சொந்தங்களின் முகங்களைப் பார்க்க வேண்டும் என்பதற்குத் தான் நான் இப்போது இங்கு வந்திருக்கிறேன்.

நம்முடைய இந்தியாவும், நீங்கள் இருக்கக்கூடிய அமெரிக்காவும் உலகில் இருக்கக்கூடிய மிக முக்கியமான நாடுகள். இரண்டுமே ஜனநாயக நாடுகள். உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக அமெரிக்கா இருக்கிறது என்றால், ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதாரமாக இந்தியா இருக்கிறது. அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்குமான நட்பு பல ஆண்டுகாலமாகத் தொடர்ந்து வருகிறது.

நட்பின் அடையாளங்கள்

இந்தியாவில் வர்த்தகம், அறிவியல், கணினி ஆகிய துறைகளில் நல்லுறவு தொடர்கிறது. கேல்லப் என்ற நிறுவனத்தினுடைய பொது கருத்துக் கணிப்பின்படி அமெரிக்கர்களுக்குப் பிடித்த நாடுகளின் பட்டியலில் ஏழாவது இடத்தை இந்தியா பெற்றிருக்கிறது. அதேபோல் அமெரிக்காவிற்குக் குடிபெயர்ந்தவர்களின் பட்டியலில் இந்திய மக்கள் இரண்டாவது இடத்தில் இருக்கிறார்கள். அமெரிக்காவில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்களில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது. கடந்த ஆண்டு அமெரிக்கா குடியுரிமை பெற்றவர்களில் மெக்சிகோவைச் சேர்ந்தவர்கள் 12.7 விழுக்காடு. இந்தியர்கள் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு இந்தியாவை ஈர்க்கின்ற நாடாக அமெரிக்கா இருக்கிறது. அமெரிக்காவில் வாழ்கின்ற மக்களில் இந்தியர்களின் எண்ணிக்கை மிக மிக குறைவு என்றாலும் உயர் கல்வியிலும், வர்த்தகத்திலும், சிறப்பான உயர் பதவிகளிலும் இந்திய வம்சாவளியினர் மிக அதிக இடங்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

அமெரிக்க நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் உயர் பதவிகளில் இருக்கின்றார்கள். விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவில் இந்திய வம்சாவளி விஞ்ஞானிகள் இடம் பிடித்திருக்கிறார்கள். 2000 ஆண்டுகளுக்குப் பிறகு இருதரப்பு வர்த்தகமும் மூன்று மடங்காக உயர்ந்துவிட்டது. இவையெல்லாம் இரண்டு நாடுகளுக்குமான நட்பின் அடையாளங்கள்.

ஒட்டுமொத்த உலகின் நலனுக்கு இந்தியா-அமெரிக்கா உறவு மிக மிக முக்கியமாக இருக்கிறது. அமெரிக்க வாழ் இந்தியர்கள் இந்திய வம்சாவளியினர் மிகச் சிறப்பாக வாழ்ந்து வருகிறீர்கள் என்பது உங்கள் மகிழ்ச்சியான முகங்களைப் பார்க்கும் போதே எனக்கு தெளிவாகத் தெரிகிறது. இந்தியா – அமெரிக்கா நட்பு என்பது இரண்டு நாட்டு அரசுகளின் உறவாக மட்டுமில்லாமல், இரண்டு நாட்டு மக்களின் நட்புறவாகவும் எப்போதும் அமைந்திருக்கிறது என்பது தான் இரு நாடுகளுக்கிடையிலான தனிச் சிறப்பு. அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு என்பது அமெரிக்காவின் ஈர்ப்புக்குரியதாக இருக்கிறது. புகழ்பெற்ற அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்களை நடத்தி வருகிறார்கள். இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகத் தமிழ்நாடு இருப்பதுதான் இதற்குக் காரணம்.

300-க்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களுடைய திட்டங்களை நிறுவியிருக்கிறார்கள். கடந்த 3 ஆண்டுகளாக அதிகமாக அமெரிக்க நிறுவனங்கள் தமிழ்நாட்டிற்கு வரத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நேரில் அழைக்கத்தான் நான் வந்திருக்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி மக்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அமெரிக்க நிறுவனங்களைத் தூண்ட வேண்டும் என்று உங்களை உரிமையோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேற்றுமையில் ஒற்றுமை

ஒரு செடியையோ, மரத்தையோ ஒரு இடத்திலிருந்து எடுத்து இன்னொரு இடத்தில் நட்டால் எல்லா செடியும் மரமும் அங்கு வளருவது இல்லை. ஆனால், நீங்கள் எல்லோரும் நாடுகள் கடந்து வந்திருந்தாலும் மிக மிக சிறப்பாக வளர்ந்திருக்கிறீர்கள். இதுதான்

நம்முடைய இந்தியருடைய பெருமை. இதுதான் அமெரிக்காவின் வளம்.

சிலர் விரும்பி வந்திருக்கலாம், சிலரை சூழ்நிலைகள் துரத்தியிருக்கலாம், உங்களில் சிலர் வசதியான சூழ்நிலையிலிருந்து வந்திருக்கலாம், சிலர் வசதி குறைவினாலும்கூட இங்கு வந்திருக்கலாம். ஆனால், இன்று எல்லோரும் உன்னதமான இடத்தைப் பிடித்திருக்கிறீர்கள் என்றால், அதற்குக் காரணம் உங்களின் உழைப்பும், அறிவும், திறமையும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும்தான் காரணம்.

மிகச் சிறந்த கல்வி, அந்த கல்வியில் அறிவுக் கூர்மை, தனித் திறமைகள், நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை, குறிப்பிட்ட இலக்கை அடைய தளராத முயற்சிகள், இவைதான் உங்களை இந்த இடத்தில் கொண்டு வந்து உயர்த்தியிருக்கிறது. பணம், புகழ், அதிகாரம், வசதி வாய்ப்புகளை விட இந்த ஐந்தும்தான் உங்களை வளர்த்து இருக்கிறது. இந்த உயர்ந்த குணங்களை மற்றவர்களுக்கும் உணர்த்தி அனைவரின் வளர்ச்சிக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் நம்முடைய நாட்டின் வளர்ச்சிக்கு காரணம். வேற்றுமை எண்ணம் துளியும் இல்லாமல் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த இந்தியத் துணைத் தூதர் திரு. ஸ்ரீகர் ரெட்டி அவர்கள், அத்துடன் அவருக்குத் துணை நின்ற அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

சிகாகோவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் முதலீடுகளையும், வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்காகவும் அமெரிக்க நாட்டிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சான்பிரான்சிஸ்கோவில் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர், அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் ரூ.900 கோடி முதலீட்டில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஓமியம் நிறுவனத்துடன் எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன,

இதன்மூலம் மொத்தம் ரூ.1,300 கோடி முதலீட்டில் 4,600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், 30.08.2024 அன்று ஆப்பிள், கூகுள், மைக்ரோசாப்ட் ஆகிய நிறுவனங்களின் உயர் அலுவலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் திறன் வளர்ச்சி மிகுந்த இளைஞர்கள், பெண் கல்வி, மேம்பாடு, உயர்கல்வியில் தமிழகத்தின் சாதனை ஆகியவற்றை பற்றி எடுத்துரைத்து, இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு மிகவும் உகந்த மாநிலமாக அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன் விளங்கும் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது, மேலும், தமிழ்நாடு அரசின் "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ், கூகுள் நிறுவனத்தின் வாயிலாக 20 இலட்சம் இளைஞர்களுக்கு அதிநவீன AI திறன் வளர்ச்சியுடன் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சான் பிரான்சிஸ்கோவில் அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில், அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக சான் பிரான்சிஸ் கோவில் இருந்து 03.09.2024 அன்று சிகாகோ வந்தடைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குச் சிகாகோவிற்கான துணைத் தூதர்

ஈட்டன் நிறுவன முதலீட்டாளர்களுடன் சந்திப்பு

திரு. சோம்நாத் கோஷ் அவர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்றார்.

சிகாகோ விமான நிலையத்தில். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, வட அமெரிக்க தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு (FETNA), தமிழ்நாடு அறக்கட்டளை, சிகாகோ தமிழ் சங்கம், மில்வாக்கித் தமிழ் சங்கம், அறம் குழு, ப்ளூமிங்டன் தமிழ்ச் சங்கம், அன்னை தமிழ் பள்ளி, மேடிசன் தமிழ்ச் சங்கம், பியோரியா தமிழ்ச் சங்கம் ஆகிய தமிழ்ச் சங்கங்களின் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிகாகோவில் பல்வேறு தொழில் நிறுவனங்களின் உயர் அலுவலர்களைச் சந்தித்துத் தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கவுள்ளார்.

சிகாகோவில் ஈட்டன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 03.09.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில், ஈட்டன் நிறுவனத்துடன் ரூ.200 கோடி முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சென்னையில் ஈட்டன் நிறுவனத்தின் உற்பத்தி வசதியை விரிவாக்குவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய பயன்பாட்டுப் பொறியியல் மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், அஷ்யூரண்ட் நிறுவனத்தின் இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தைச் (GCC) சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில், அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களையும் ஈர்த்துள்ளதோடு, 2030-ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாகத் தமிழ்நாட்டை மாற்றவேண்டும் என்ற இலக்கை அடைவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும் முனைப்போடு எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் நிலவும் அமைதியான சூழல் காரணமாக ஏராளமான தொழிற்சாலைகள் கடந்த மூன்றாண்டுகளாக உருவாகி வருகிறது. தொழில் வளர்கிறது என்றால் மாநிலம் வளர்கிறது, அதன்மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்புகள் மூலமாக மாநிலத்தின் சமூக, பொருளாதார நிலை உயர்ந்து வருகிறது.

அந்த வகையில், வளர்ச்சியின் அடையாளமாகத் திகழும் தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டில் அதிக அளவில் தொடங்கிட முதலீடுகளை ஈர்த்திடும் வகையிலும், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் மாண்புமிகு

ஈட்டன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க நாட்டிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இப்பயணத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சான்பிரான்சிஸ்கோவில் 29.08.2024 அன்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், உலகின் முன்னணித் தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர், அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் ரூ.900 கோடி முதலீட்டில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 30.08.2024 அன்று ஆப்பிள், கூகுள் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், 31.08.2024 அன்று ஓமியம் நிறுவனத்துடன் எலக்ட்ரோலைசலர்கள் உற்பத்தி மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, 03.09.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரில் ஈட்டன் மற்றும் அஷ்யூரண்ட் நிறுவனங்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

ஈட்டன் நிறுவனம்

ஈட்டன் கார்ப்பரேஷன் (Eaton Corporation) நிறுவனம் என்பது தரவு மையம், பயன்பாடு, தொழில்துறை, வணிகம், இயந்திரக் கட்டடம், குடியிருப்பு, விண்வெளி, இயக்க சந்தைகளுக்கான உற்பத்தி, பகிர்மான பணிகளை மேற்கொள்ளும் மேலாண்மை நிறுவனமாகும். குடியிருப்பு, வணிகக் கட்டடம், மின்சார வாகனங்கள், தரவு மையம், eVTOL வாகனங்களுக்கான ஆற்றல் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், நுகர்வுக்கு அவற்றின் தயாரிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் தலைமையகங்கள் அயர்லாந்து நாட்டின் டப்ளின், அமெரிக்க நாட்டின் ஓஹியோவின் பீச்வுட் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. உலகளவில் 35 நாடுகளில் சுமார் 208 இடங்களில் உற்பத்தி வசதிகள் கொண்ட பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

அஷ்யூரண்ட் நிறுவன முதலீட்டாளர்களுடன் சந்திப்பு

ஈட்டன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், ஈட்டன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே, ரூ.200 கோடி முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் தற்போதுள்ள ஈட்டன் நிறுவனத்தின் உற்பத்தி வசதியை விரிவாக்குவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய பயன்பாட்டுப் பொறியியல் மையத்தை (Global Utility Engineering Centre) நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், ஈட்டன் நிறுவனத்தின் குளோபல் எனர்ஜி தலைவர் திரு. மேத்யூ ஹாக்மேன் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

அஷ்யூரண்ட் நிறுவனம்

அஷ்யூரண்ட் நிறுவனம் (Assurant, Inc.) பார்ச்சூன் 500 இன்சூரன்ஸ் நிறுவனங்களில் ஒன்றாகும், இந்நிறுவனம் அட்லாண்டாவை தலைமையிடமாக கொண்டு இடர் மேலாண்மை தயாரிப்புகள்மற்றும்சேவைகளைவழங்கிவருகிறது. சொத்து, விபத்து, நீட்டிக்கப்பட்ட சாதனங்களின் பாதுகாப்பு போன்ற பலவிதமான சிறப்பு மற்றும் முக்கிய சந்தை காப்பீட்டுத் திட்டங்களை வழங்கி வருகின்றன. இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின் அட்லாண்டாவில் அமைந்துள்ளது.

அஷ்யூரண்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், அஷ்யூரண்ட் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே, அஷ்யூரண்ட் நிறுவனத்தின் இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தை (GCC) சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், அஷ்யூரண்ட் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் திரு. பிஜு நாயர் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

சிகாகோவில் ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் ரூ.2,000 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 04.09.2024 அன்று அமெரிக்க நாட்டின்

அஷ்யூரண்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

சிகாகோ நகரில், ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் ரூ.2,000 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி, உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre), உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், உலகின் முன்னணிக் காலணி, விளையாட்டு ஆடைகள் தயாரிப்பு நிறுவனமான நைக்கி, உலகின் முன்னணி ஹெல்த்கேர் நிறுவனமான ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

மாநிலம் முழுவதும் பரவலான, நிலைக்கத்தக்க வளர்ச்சியை உறுதி செய்வதில் தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொழில் திட்டங்கள் தொடங்கப்படுவதால், அம்மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதோடு, ஆயிரக்கணக்கான இளைஞர்கள், பெண்களுக்கு அவர்கள் வசிக்கும் பகுதிகளின் அருகாமையிலேயே வேலைவாய்ப்புகள் பெருமளவில் உருவாக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் திறன் வளர்ச்சி மிகுந்த இளைஞர்கள், பெண் கல்வி மற்றும் மேம்பாடு, உயர்கல்வியில் சாதனை, தரமான உட்கட்டமைப்பு வசதிகள் என இந்தியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு மிகவும் உகந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது. தமிழ்நாட்டில் அதிக அளவில் நிறுவனங்களைத் தொடங்கிடவும், தொழில் முதலீடுகளை ஈர்த்திடும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க நாட்டில் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இப்பயணத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சான் பிரான்சிஸ்கோவில் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களான நோக்கியா, பேபால், ஈல்ட்டு இன்ஜினியரிங் சிஸ்டம்ஸ், மைக்ரோசிப் டெக்னாலஜி, இன்பிங்ஸ் ஹெல்த்கேர், அப்ளைடு மெட்டீரியல்ஸ் ஆகிய 6 நிறுவனங்களுடன் ரூ.900 கோடி முதலீட்டில் 4,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஆப்பிள், கூகுள், மைக்ரோசாப்ட் நிறுவனங்களின் உயர் அலுவலர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை

ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மேற்கொள்ள அழைப்பு விடுத்ததோடு, கூகுள் நிறுவனத்துடன் தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வகங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், ஓமியம் நிறுவனத்துடன் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டன.

சிகாகோ நகரில் 03.09.2024 அன்று ஈட்டன் நிறுவனத்துடன் ரூ.200 கோடி முதலீட்டில், 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் ஈட்டன் நிறுவனத்தின் உற்பத்தி வசதியை விரிவாக்குவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உலகளாவிய பயன்பாட்டு பொறியியல் மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும், அஷ்யூரண்ட் நிறுவனத்தின் இந்தியாவின் முதல் உலகளாவிய திறன் மையத்தை (GCC) சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம், மொத்தம் 10 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக, 04.09.2024 அன்று சிகாகோவில், ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும், நைக்கி, ஆப்டம் நிறுவனங்களின் உயர் அலுவலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளவும் அழைப்பு விடுத்தார். அதன் விவரங்கள்:

ட்ரில்லியன்ட் நெட்வர்க்ஸ் நிறுவனம் (Trilliant Networks, Inc)

ட்ரில்லியன்ட் நிறுவனம் மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு (Advanced Metering Infrastructure), ஸ்மார்ட் கிரிட், ஸ்மார்ட் நகரங்கள், IIoT (Industrial Internet of Things) ஆகியவற்றிற்கான தீர்வுகளை வழங்கும் முன்னணி சர்வதேச நிறுவனமாகும். இந்நிறுவனம் ஆற்றல் திறன், நம்பகத்தன்மை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களின் ஒருங்கிணைப்பு, மேம்பட்ட அளவீட்டு உள்கட்டமைப்பு போன்றவற்றிற்குத் தீர்வுகளை வழங்குகிறது. இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின், வட கரோலினாவின் கேரியில் அமைந்துள்ளது.

நைக்கி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ட்ரில்லியன்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், ட்ரில்லியன்ட் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே ரூ.2,000 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டில் வளர்ச்சி, உலகளாவிய உதவி மையம் (Development & Global Support Centre), உற்பத்தி மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், ட்ரில்லியன்ட் நிறுவனத்தின் தலைமை வணிக அலுவலர் திரு. மைக்கேல் ஜே மார்டிமர், உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

நைக்கி நிறுவனம் (NIKE Inc.)

நைக்கி நிறுவனம் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகின் மிகப்பெரிய விளையாட்டு காலணிகள், ஆடைகள் தயாரிப்பு நிறுவனமாகும். நைகி நிறுவனம் ஃபார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

கால்பந்து, கூடைப்பந்து, தடகளம், டென்னிஸ், அமெரிக்கக் கால்பந்து, கோல்ஃப், ஐஸ் ஹாக்கி போன்ற விளையாட்டிற்கான காலணிகள், ஜெர்சிகள், ஷார்ட்ஸ், கிளீட்ஸ், பேஸ்லேயர்ஸ் போன்றவை இதன் தயாரிப்புப் பொருட்களில் அடங்கும்.

இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின், ஓரிகானின் பெவர்டன்னில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் நைக்கி நிறுவனம் அதன் விநியோகச் சங்கிலி விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது.

மேலும், நைக்கி நிறுவனத்தின் இரண்டு பெரிய ஒப்பந்த உற்பத்தியாளர்களான ஃபெங் டே, பவுச்சென் மூலம் தமிழ்நாட்டில் நைகி நிறுவனம் தனது காலணி உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம் ஆண்டுக்கு 60 இலட்சம் ஜோடி காலணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதில் 28,000 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

நைக்கி நிறுவனத்தின் உயர் அலுவலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்துத் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நைக்கி நிறுவனத்தின் தலைமை வழங்கல் அலுவலர் (Chief Supply Chain Officer) திரு. வெங்கடேஷ் அழகிரிசாமி, துணைத் தலைவர்கள் திருமதி கிறிஸ்டன் ஹேன்சன், திரு. ஜார்ஜ் காசிமிரோ, உயர் அலுவலர்களுடன், தமிழ்நாட்டில் தோல் அல்லாத காலணிகளின்

ஆப்டம் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்துத் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆப்டம் இன்சைட் நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திரு. ரோஜர் கானர், யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் முதுநிலைத் துணைத் தலைவர் திரு. ஜான் மியாட் மற்றும் உயர் அலுவலர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

இச்சந்திப்பின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் திரு. ரோஜர் கானர் அவர்கள், தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனத்தின் தற்போதைய செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாட்டின் செழித்துவரும் சுகாதாரப் பாதுகாப்புத் துறைக்கு ஏற்ற வகையில், தொழில்துறைக்குத் தயாரான திறமைக் குழுவை உருவாக்குவதற்கான ஒத்துழைப்பு குறித்தும் ஆலோசித்தார்.

மேலும், இச்சந்திப்பின்போது, திறன் மேம்பாடு மற்றும் திறன்சூழலை எவ்வாறு இணைந்து செயல்படுத்துவது என்பது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுடன் கலந்துரையாடியது மகிழ்ச்சியளிக்கிறது என்று தெரிவித்த திரு. ரோஜர் கானர் அவர்கள், உயர் செயல்திறன் கொண்ட நவீனச் சுகாதார அமைப்பை உருவாக்குவதற்கான தங்கள் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, தொடர்ந்து உலகளாவிய திறமைகளில் முதலீடு செய்து வருவதாகவும், வாடிக்கையாளர்களின் சேவை, தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்திசெய்ய தங்கள் சேவை திறன்கள், செயல்திறனை மேம்படுத்தி வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

ஆப்டம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

உற்பத்தியை மேலும் விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள், ஆடைகள் உற்பத்திக்கான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவது பற்றியும், சென்னையில் தயாரிப்பு உருவாக்கம் மற்றும் வடிவமைப்பு மையத்தை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், தமிழ்நாடு அரசின் முதன்மையான திறன் மேம்பாட்டுத் திட்டமான “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ், திறன் கூட்டாண்மையுடன் இணைந்து செயல்படுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

ஆப்டம் நிறுவனம் (Optum)

ஆப்டம் நிறுவனம் யுனைடெட் ஹெல்த்கேர் குழுமத்தின் துணை நிறுவனமாகும். இது அமெரிக்காவில் உள்ள ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனங்களில் முன்னணி நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனம் Optum Rx, Optum Health, Optum Insight ஆகிய மூன்று வணிகங்களை மேற்கொண்டு வருகிறது. தரவு, பகுப்பாய்வு, மருந்தகப் பராமரிப்பு சேவைகள், மக்கள் தொகை சுகாதாரம், சுகாதார விநியோகம், நடவடிக்கைகள் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் தலைமையகம் அமெரிக்க நாட்டின் மினசோட்டா, ஈடன் பிராரியில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் ஆப்டம் நிறுவனம் சென்னையில் 5,000க்கும் மேற்பட்ட ஊழியர்களுடன் Revenue Cycle Management செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் BNYமெலன் வங்கியின் உயர் அலுவலர்கள் சந்திப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, இந்த மூன்று ஆண்டுகளில் தொழில்துறையில் பல்வேறு சாதனைகளைப் புரிந்து வருவதோடு, முதலீடுகளை ஈர்ப்பதற்கு எடுத்து வைத்திடும் ஒவ்வொரு அடியும், வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் ஒரு பெரிய இலட்சியத்தினைக் கொண்டதாகும் என்பதை உணர்ந்து செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் பல்வேறு முன்னெடுப்புகள், உலகளாவிய நிறுவனங்களின் கவனங்களை வெகுவாக ஈர்த்திருக்கும் காரணத்தால் தொழில் நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாட்டை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றது.

தற்போது அதிவேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், மின்னணுவியல், புத்தாக்கம், புத்தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் சிறப்பான வளர்ச்சியைப் பெற பல்வேறு சீரிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. நாளைய தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை வளர்த்திடும் வகையில் மாபெரும் திறன் மேம்பாட்டுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தை அரசு தொடங்கி இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.

படித்த திறன்மிகு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இப்பயணத்தின் போது, அமெரிக்க நாட்டின் சிகாகோவில், BNY மெலன் (The Bank of New York Mellon Corporation) வங்கியின் உயர் அலுவலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சிகாகோவில் சந்தித்துத் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

BNY மெலன் (The Bank of New York Mellon Corporation):

BNY மெலன் வங்கி உலகின் மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றாகும். இவ்வங்கி நிதி பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டதாகும். இந்த வங்கிச் சொத்து சேவை, கருவூலச் சேவை, முதலீடுகள் மேலாண்மை போன்ற சேவைகளை அமெரிக்க நாட்டின், நியூயார்க் நகரை தலைமையிடமாகக்கொண்டு செயல்பட்டுவருகிறது. இந்தியாவிலும் இவ்வங்கிக்கு பல கிளைகள் உள்ளன. தமிழ்நாட்டில் செயற்கை நுண்ணறிவை மேம்படுத்தவும், அதிநவீனத் தொழில்

நுட்பத்தை வங்கி சேவைகளில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு தமிழ்நாட்டு அரசுடன் இணைந்து வங்கிச் சேவைகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

BNY மெலன் வங்கி தனது ஆறு முக்கிய மையங்களில் ஒன்றாகச் சென்னையை தேர்ந்தெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் அதிகளவு கணினிப் பொறியியல் படித்த மாணவர்கள் உள்ளதால் சென்னையில் சர்வதேசத் தரத்தில் பயிற்சி மையம் அமைத்திடவும், தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கும், மென்பொருள் மேலாண்மை, செயற்கை நுண்ணறிவை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.09.2024 அன்று சிகாகோவில் அமெரிக்கவாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

எனக்கு என்ன தோன்றுகிறது என்றால் பேசாமல் உங்கள் முகத்தை மட்டுமே பார்த்துக் கொண்டே இருந்தால் போதும்.

தமிழ்நாட்டில் நான் முதலமைச்சராக - திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டால், எப்படி இருக்குமோ, அதைவிட அதிகமான உணர்வுப்பெருக்கோடு சிகாகோவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் நல்ல வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. தமிழ் மண்ணில் இருக்கும் மாதிரியான உணர்வை எனக்கு ஏற்படுத்தியிருக்கும் உங்களுக்கு, உங்களில் ஒருவனாக – உங்கள் குடும்பங்களில் ஒருவனாக நான் எனது இதயப்பூர்வமான நன்றியை மீண்டும் மீண்டும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான், சிங்கப்பூர், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்குச் சென்று அதற்குப் பிறகு, அமெரிக்காவுக்கு லேட்டாக வந்திருந்தாலும் லேட்டஸ்டாக வரவேற்புக் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் திரு.டி.ஆர்.பி. ராஜா அவர்கள் பேசும்போது கூட சொன்னார், நான் எங்கள் பகுதிக்கு வர வேண்டும், எங்கள் ஊருக்கு வர வேண்டும் என்று ஒரு போட்டியே நடந்தது, அதில் சிகாகோ வெற்றி பெற்றுள்ளது. அப்படி வெற்றி பெற்றிருக்கக்கூடிய சிகாகோவிற்கு வந்து உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சிகாகோவில் அமெரிக்கவாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் உரையாற்றல்

முதலீட்டாளர்களின் முதல் முகவரி

இதே சிகாகோவிற்கு நம்முடைய தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமெரிக்கப் பயணத்தின்போது வந்திருக்கிறார். நான் இந்த நிகழ்ச்சிக்கு வருவதாக ஒப்புதல் தந்த பிறகு தலைவர் கலைஞரின் அமெரிக்கப் பயணத்தில் எங்கு எல்லாம் சென்றார் என்று எடுத்துப் படித்தேன்.

1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ஆம் நாள் வாஷிங்டனுக்கு வந்த தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு இடங்களைப் பார்வையிட்டிருந்தார். அதிலும் குறிப்பாக, ஆர்லண்டோ நகரில் நடைபெற்ற கலைவிழாவில் கலந்துகொண்டு, அங்கிருந்து நீரூற்றைப் பார்த்து ஒரு கவிதை எழுதி, அங்கிருந்து சென்னைக்கு அனுப்பி வைத்தார். அதை நான் முரசொலியில் படித்துப் பார்த்தேன்.

அந்தக் கவிதையில் சொல்லியிருக்கிறார்:

"ஆர்லந்தோ எனும் நகரில் அரியதோர் ஏரியிலே
அழகிய மத்தாப்பூ ஊற்றொண்டு கண்டேன்
ஒளிவிளக்குப் போடுகின்ற தாளத்திற்கு
ஒரு லயமும் பிசகாமல் ஆடுகின்ற
நீரூற்று ஆட்டக்காரி நாட்டியத்தின்
நேர்த்தி யென்ன சொல்வேன்!"

என்று தொடங்கும் அந்தக் கவிதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. அடுத்து, இதே சிகாகோவுக்கு வந்திருந்தார். வந்தவர், சிகாகோ பல்கலைக்கழகத்தின் அரசியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

பின்னர் நியூயார்க் சென்று, நியூயார்க் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது எப்படி தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற தகுதியோடு தலைவர் கலைஞர் அவர்கள் வந்தாரோ, அதேபோல் இன்று நானும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற தகுதியோடு இங்கு வந்திருக்கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, தமிழ்நாடு எப்படியெல்லாம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று, இங்கிருந்து தமிழ்நாட்டில் இருக்கும் உங்கள் உறவுகளிடம் நிச்சயமாகப் பேசிக் கேட்டிருப்பீர்கள்... செய்திகளில் படித்திருப்பீர்கள்... எப்படி இருக்கிறது உங்களிடம் கேட்கிறேன்? (மக்கள் மிகச் சிறப்பு என்று கூறினர்) நன்றி, நன்றி.

தொழில் வளர்ச்சியைப் பொருத்தவரைக்கும், நான் எந்த நாட்டுக்குச் சென்றாலும், எந்த நிறுவனங்களின் அதிபர்களைச் சந்தித்தாலும், இந்தியாவிலேயே தமிழ்நாடு எப்படியெல்லாம் முன்னிலை வகிக்கிறது – தமிழ்நாட்டில் என்னென்ன சிறப்புகள் இருக்கிறது என்று சொல்லி, தொழில் தொடங்க வாருங்கள் என்று நான் அழைப்பு விடுப்பேன். அதனால்தான், முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெருமையை அடைந்திருக்கிறோம்.

தமிழ்த்தாயின் குழந்தைகள் நாம்

எந்த நாட்டுக்கு நான் அரசுமுறைப் பயணமாக சென்றாலும், என் எண்ணம் எல்லாம், அங்கு வாழும் நம்முடைய தமிழர்களைச் சந்திக்க வேண்டும், அங்கு இருக்கும் தமிழ் அமைப்புகளை சந்திக்க வேண்டும் என்றுதான் இருக்கும்! அப்படி நான் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தமிழர்களைச் சந்தித்திருந்தாலும், தமிழ்நாட்டு மக்கள் அதிகமாகப் புலம்பெயர்ந்து வாழும் நாடான அமெரிக்காவில் உங்கள் முகங்களை பார்க்கும் போது, மீண்டும் சொல்கிறேன் பேசாமல் அப்படியே நின்று கொண்டு உங்களையே பார்த்துக்கொண்டு இருக்கலாம் என்று தோன்றுகிறது.

அந்தளவுக்கு உங்கள் பாசமும் அன்பும் என்னை கட்டிப்போட்டிருக்கிறது. இந்தத் தருணத்தில், நான் குறிப்பிட விரும்புவது ஈராயிரம் ஆண்டுகள் அன்னைத் தமிழகம் தவமிருந்து பெற்றெடுத்த தலைமகன். 'சிங்க நடையும் சிங்காரத் தெள்ளு நடையும் பொங்கு கடல்நடையும் புரட்சிக் கவிநடையும் தன்னுடைய உரைநடையால் கண்ட கோமான் – தம்பிமார் படைமீது விழியொற்றி வெற்றி கண்டிருக்கும் பூமான். பூமிப்பந்தில் தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அங்கு எல்லாம் வாழ்ந்திருக்கக்கூடிய அறிவுலக ஆசான், ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. "அனைவரும் பிறக்க ஒரு தாய் வயிறு தாங்காது என்ற காரணத்தால்தான், தனித்தனி தாயினுடைய வயிற்றில் பிறந்த அன்பு உடன்பிறப்புகள் நாம்" என்று சொல்வார். நாமெல்லாம் தனித்தனி தாயுடைய வயிற்றில் பிறந்திருந்தாலும் – நாம் எல்லோருக்கும் இந்த உறவை – பாசத்தை ஊட்டிய ஒரு தாய் இருக்கிறார், அவர்தான் தமிழ்த்தாய்!

உளங்கவர் ஓவியமே! உற்சாகக் காவியமே! ஓடை நறுமலரே! ஒளியுமிழ்ப் புதுநிலவே! அன்பே! அழகே! அமுதே! உயிரே! இன்பமே! இனியத் தென்றலே! பனியே! கனியே! பழரசச் சுவையே! மரகத மணியே! மாணிக்கச் சுடரே! மன்பதை விளக்கே! – என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் தமிழைத் தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் இருக்காது.

அந்தத் தமிழ்த்தாயின் குழந்தைகள் நாம் என்பதுதான் நம்முடைய பெரும் அடையாளமாக இருக்கிறது. \

'வேர்களைத் தேடி' திட்டம்

கடந்த வாரம் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான விவாத நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்தேன். நம்முடைய தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் 'வேர்களைத் தேடி' திட்டத்தின் மூலமாக, தமிழ்நாட்டைப் பார்க்க நம்முடைய பண்பாட்டை இறுகப் பற்றிக்கொள்ள நம்முடைய சொந்தங்களை அடையாளம் காண வந்த இளைஞர்கள் பங்கேற்ற நிகழ்ச்சி அது.

சூழ்நிலைகளின் காரணமாகத் தொலைதூர தேசங்களுக்கு வந்து தாய்த் தமிழ்நாட்டின் தொடர்பை இழந்து இன்றைக்கு மீண்டும் தாய் மண்ணின் வாசத்தைத் தாய் மண்ணின் அரவணைப்பை உணர்ந்த இளைஞர்களின் உணர்ச்சிக் குவியலாக அந்த நிகழ்ச்சி இருந்தது. அதிலும் ராதிகா என்ற மியான்மர் நாட்டைச் சேர்ந்த நம் சகோதரி, பல ஆண்டுகளாக விட்டுப்போன உறவை மீண்டும் கண்டுபிடித்து நா தழுதழுக்க பேசியது என் நெஞ்சிலேயே இருக்கிறது.

தன்னுடைய வள்ளிப்பாட்டியைக் கண்டுபிடிக்க நினைத்த அவர், இப்போது தன் மாமா வீட்டோடு சேர்ந்திருக்கிறார். "அங்கு கலாச்சாரம் எல்லாம் இருக்கிறது. ஆனால், சொந்தக்காரர்கள் குறைவு" என்று சொல்லி அவர் கலங்கியது, உறவுகளைப் பிரிந்து ஏங்கும் அத்தனை அயலகத் தமிழர்களின் உணர்வின் பிரதிபலிப்பாக இருந்தது.

எப்படிப்பட்ட வரலாற்றுக்கும் – பண்பாட்டுக்கும் சொந்தக்காரர்கள் நாம்? இனம், மொழி, நாடு, சாதி, மதம், பால், வர்க்கம், நிறம் என்று எந்தப் பாகுபாட்டுக்கும் இடமளிக்காமல், உலக உயிர்கள் அனைத்துக்குமான பொதுமறையைத் தந்த வான்புகழ் வள்ளுவரை தந்த மண்ணுக்கு சொந்தக்காரர்கள் நாம்!

சமூகநீதி

ஊரைத் தாண்டிய ஊரும் உலகமும் எப்படி இருக்கும் என்று அறியாக் காலத்திலேயே, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று எல்லோரையும் சொந்தமாகக் கருதி இலக்கியம் படைத்த புகழுக்குச் சொந்தக்காரர்கள் நாம்!

கீழடி கண்டுபிடிப்புகள் மூலமாக, நான்காயிரம் ஆண்டுக்கு முன்பாகவே எழுத்தறிவு பெற்றும், நகர நாகரிகத்துடனும் மேம்பட்ட சமூகமாக வாழ்ந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள் நாம்!

அதனால்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனித் தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்படவேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்கிறேன்.

இப்படிப்பட்ட பெருமைக்கும், திறமைக்கும், ஆற்றலுக்கும், அன்புக்கும் சொந்தக்காரர்களான தமிழினம் இன்றைக்குப் பல நாடுகளில் பல்வேறு உயர் பொறுப்புகளில் இருக்கிறோம். அந்த உயர்பொறுப்புகளுக்குக் கடைக்கோடியில் உள்ள ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களும் வரமுடியும் என்பதைச் சாத்தியப்படுத்தியது, நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கும் சமூகநீதியும் அதற்காகப் பாடுபட்ட தலைவர்களும்தான்!

இதுதான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தமிழினத் தலைவர் கலைஞரும் காணப் பாடுபட்ட சமுதாயம்! அதற்காகத்தான், நீதிக்கட்சி ஆட்சி, பெருந்தலைவர் காமராசர் ஆட்சி, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்று, தொடர்ந்து தமிழ்நாடு கல்விக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம்! தலைவர் கலைஞர் கணினிக் கல்விக்குத் தந்த முக்கியத்துவத்தால்தான், ஐ.டி. துறையில் தமிழ்நாடு முன்னேறியது.

அயலகத் தமிழர் நல வாரியம்

கலைஞர் உருவாக்கிய டைடல் பூங்கா மாதிரி அப்போது வேறு எந்த மாநிலத்திலும் பெரிதாக இல்லை. கலைஞர் அமைத்த அடித்தளத்தில், உலகத்தைத் தமிழ்நாட்டை நோக்கி ஈர்த்தோம்; தமிழ்நாட்டை உலகம் உள்வாங்கியது. அதற்கு சாட்சியங்களாகத்தான் நீங்கள் இருக்கிறீர்கள்! தமிழ்நாட்டுத் தமிழர்களை மட்டுமல்ல; உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்குப் பாதுகாப்பரணாக நமது திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டில் இருக்கிறது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்காக 'அயலகத் தமிழர் நல வாரியம்' உருவாக்கி இருக்கிறோம். ஜனவரி 12-ஆம் நாளை அயலகத் தமிழர் நாளாகக் கொண்டாடுகிறோம். அந்த வாரியத்தின் மூலமாக, 'தமிழால் இணைவோம்', 'உலகெங்கும் தமிழ்', 'தமிழ் வெல்லும்' ஆகிய தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக கட்டணமில்லா உதவி மையம் தொடங்கப்பட்டிருக்கிறது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களின் சொந்த ஊர்களை மேம்படுத்தும் 'எனது கிராமம்' என்ற திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது.

அயலகத் தமிழர்க்குக் கணியன் பூங்குன்றனார் விருது வழங்கப்படுகிறது!

அயல்நாடுகளில் பணிக்குச் சென்று, அங்கு இறக்க நேரிடுபவர்களின் குடும்பத்திற்கு நிதி வழங்கப்படுகிறது.

உக்ரைன் நாட்டுக்குப் படிக்கச் சென்ற 1,524 மாணவர்களைப் போர் காலத்தில் மீட்டுப் வந்தோம்.

தாய்வீடாகத் தமிழ்நாடு

கம்போடியா, தாய்லாந்து, மியான்மரில் இருந்து 83 தமிழர்களை மீட்டு வந்தோம்.

இஸ்ரேல் நாட்டுக்குக் கல்வி கற்கச் சென்று படிப்பைத் தொடர முடியாத 126 பேரை மீட்டோம்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 2,398 பேரை அயல்நாடுகளில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் மீட்டு வந்தோம்.

மொத்தத்தில், தமிழர்கள் எங்குப் பாதிக்கப்பட்டாலும், "நமக்கு என்று தாய்வீடாகத் தமிழ்நாடு இருக்கிறது" என்ற உணர்வை நம்பிக்கையை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்படுத்தி வருகிறது. இது அனைத்துக்கும் முத்தாய்ப்பான திட்டம்தான் 'வேர்களைத் தேடி' என்று, அயலகத்தில் வாழும் நம்முடைய குழந்தைகளைத் தமிழ்நாட்டுக்கு அழைத்து வரும் திட்டம்! அதனால்தான், நான் எப்போதும் சொல்வேன்: "இது ஒரு கட்சியின் அரசல்ல; ஒரு இனத்தின் அரசு!"

சாதி – மத வேறுபாடுகளை வீழ்த்தும் வல்லமையும், எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தும் வலிமையும் தமிழுக்குதான் இருக்கிறது! "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற உணர்வு கொண்டவர்கள் நாம்! இந்த எண்ணத்தை விதைத்தது திராவிட இயக்கம்! உலகத்தில் வேறு எந்த இனத்துக்கும் இல்லாத பெருமை நம் தமிழினத்துக்கு உண்டு.

ஒரு தாய் மக்கள்

தங்களின் இன்னுயிரையும் தீக்குத் தின்னக் கொடுத்து, தாய்மொழியைக் காத்த தியாக மறவர்கள் நாம்! அந்தத் தியாக மறவர்களைக் கொடுத்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன்

சிகாகோவில் அமெரிக்கவாழ் தமிழர்கள் சந்திப்பு

நான் என்றகர்வம் எனக்குண்டு! மொழிப்பற்றுக்கும், மொழிவெறிக்குமான வேறுபாட்டையும் – இனப்பற்றுக்கும், இனவெறிக்குமான வேறுபாட்டை அறிந்தவர்கள் நாம்!

இங்குக் கூடியிருக்கும், உங்களில் சிலர் மட்டும்தான் இந்த நாட்டுக்கு விரும்பி வந்திருப்பீர்கள். மற்றவர்கள், சூழ்நிலைகளின் காரணமாகவும் பணிகளுக்காகவும் இங்கு வந்திருப்பீர்கள். அப்படி வந்து உங்கள் திறமையால் உயர்ந்த இடங்களை அடைந்திருக்கிறீர்கள். கிணற்றுத் தவளைகள் அல்ல தமிழர்கள்; வானத்தையே வசப்படுத்தும் வானம்பாடிகள் என்பதற்கான பொருள் நீங்கள்! திறமையால் தமிழன் தலைநிமிர்ந்து வாழ்வான் என்பதன் அடையாளம் நீங்கள்!

உங்களிடம் நான் வைக்கும் ஒரே கோரிக்கை. உங்களுக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள். ஒரு தாய் மக்களாக வாழுங்கள். உங்கள் உயர்வுக்குக் காரணமான அறிவையும், உழைப்பையும் மட்டும் நம்பி, வாழ்க்கைப் பயணத்தைத் தொடருங்கள்.

உங்களிடம் நான் கேட்டுக்கொள்வது எல்லாம். ஆண்டுக்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டுக்குக் குழந்தைகளோடு வாருங்கள். வானுயர்ந்து நிற்கும் வள்ளுவரைக் காட்டுங்கள். நம்முடைய வரலாற்றின் அடையாளமாக விளங்கும் கீழடி அருங்காட்சியகத்தைத் காட்டுங்கள்.

சிவகளை, கொற்கை, பொருநை போன்ற இடங்களுக்கு அழைத்துச்செல்லுங்கள். உங்களால் முடிந்த செயல்களைத் தமிழ்நாட்டுக்குச் செய்யுங்கள். தமிழ்நாட்டுக்கு அழைத்து வரும் உங்கள் குழந்தைகளிடம், "நம்முடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர்தான் இங்கு முதலமைச்சராக இருக்கிறார். அவர்தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்" என்று சொல்லுங்கள்!

நான் இங்கிருந்து தமிழ்நாட்டுக்குத் திரும்பிய பிறகும், உங்களின் இந்த ஆரவாரமும் மகிழ்ச்சியான முகங்களும்தான் எப்போதும் என் ஞாபகத்துக்கு வரும்!

சிகாகோவில் அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை 08.09.2024 அன்று சிகாகோவில், அமெரிக்க நாட்டிலுள்ள பல்வேறு தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டிற்குத் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றிபெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில், அதிக முதலீடுகளை ஈர்க்கும் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த தொழில்களையும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களையும் ஈர்த்துள்ளதோடு, 2030-ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாகத் தமிழ்நாட்டை மாற்ற வேண்டும் என்ற இலக்கை அடைவதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் முனைப்போடு எடுத்து வருகிறது.

அந்த வகையில், வளர்ச்சியின் அடையாளமாக திகழும் தொழில் நிறுவனங்களைத் தமிழ்நாட்டில் அதிக அளவில் தொடங்கிட முதலீடுகளை ஈர்த்திடும் வகையிலும், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க நாட்டில் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்தப் பயணத்தின்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், உலகின் பல்வேறு முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, பல்வேறு நிறுவனங்களின் உயர் அலுவலர்களைச் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பும் விடுத்தார்.

மேலும், இப்பயணத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து, அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் சார்பில் சான் பிரான்சிஸ்கோ மற்றும் சிகாகோவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, தமிழ்ச் சொந்தங்களோடு கலந்துரையாடினார்.

அதன் தொடர்ச்சியாக, 08.09.2024 அன்று சிகாகோவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, தமிழ்நாடு அறக்கட்டளை, வட அமெரிக்காவின் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு – FeTNA, சிகாகோ தமிழ்ச் சங்கம், அறம் சிகாகோ, லேக் கவுண்டியில் உள்ள தமிழர்கள் சங்கம், அகரம் தமிழ் அகாடமி, அன்னை தமிழ் அகாடமி, செயின்ட் லூயிஸ் தமிழ்ச் சங்கம், இந்தியா தமிழ்ச் சங்கம், கிரேட்டர் மில்வாக்கி தமிழ்ச் சங்கம், மெக்லீன் மாவட்ட தமிழ்ச் சங்கம், மிச்சிகன் தமிழ்ச் சங்கம், அயோவா தமிழ்ச் சங்கம், வடகிழக்கு விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம், விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம், மினசோட்டா தமிழ்ச் சங்கம், டென்னசி தமிழ்ச் சங்கம், கென்டக்கி தமிழ்ச் சங்கம், அமெரிக்கத் தமிழ்த் தொழில்முனைவோர் சங்கம் (ATEA), உலகளாவிய எங்கள் குழுக்கள் சங்கம், தமிழ் தொழில்நுட்ப தொழில்முனைவோர் கவுன்சில் (TTEC), எழுச்சி அமெரிக்கா சங்கம், கொலம்பஸ் தமிழ்ச் சங்கம், கன்சாஸ் தமிழ்ச் சங்கம், வடகிழக்கு ஓஹியோ தமிழ்ச் சங்கம், பியோரியா தமிழ்ச் சங்கம், டேட்டன் தமிழ்ச் சங்கம், அமெரிக்கத் தமிழ் மருத்துவ சங்கம் (ATMA), அமெரிக்கத் தமிழ்ப் பள்ளிகள் சங்கம், கிரேட்டர் சின்சினாட்டி தமிழ்ச் சங்கம் (GCTS), குவாட் சிட்டி தமிழ்ச் சங்கம் ஆகிய சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டிற்குத் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்காவிற்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பயணம் வெற்றி பெறவும், அதிக அளவிலான முதலீடுகள் தமிழ்நாட்டிற்குக் கிடைத்திடவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், உங்களுக்குள் எந்தப் பிளவுகளும் ஏற்பட அனுமதிக்காதீர்கள் என்றும், ஆண்டுக்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டுக்குக் குடும்பத்துடன் வாருங்கள் என்றும் கேட்டுக்கொண்டார்.

தங்களைச் சந்தித்ததில் அளவில்லா மகிழ்ச்சியடைந்ததாகவும், அமெரிக்கவாழ்த் தமிழர்களின் நல்வாழ்வு சிறக்க வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

ஜாபில், ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 09.09.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஜாபில் நிறுவனத்துடன் ரூ.2,000 கோடி முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளியில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கும், ராக்வெல்

ஜாபில் நிறுவன முதலீட்டாளர்களுடன் சந்திப்பு

ஆட்டோமேஷன் நிறுவனத்துடன் ரூ.666 கோடி முதலீட்டில் காஞ்சிபுரத்தில் மின்னணு உற்பத்தி நிறுவன விரிவாக்கத்திற்கும், ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் (MSME), ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டின் மகத்தான வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, அதன்மூலம் தொழில் வளர்ச்சியைச் சிறப்புற உயர்த்தி, தமிழ் மக்கள் அனைவருக்கும் நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் சிறப்பான வாழ்க்கை நிலையை ஏற்படுத்திட வேண்டும் என்ற குறிக்கோளோடு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, இந்திய அளவில் தமிழ்நாடு பல பொருளாதாரக் குறியீடுகளில் முன்னணி மாநிலமாக விளங்கி வருகிறது.

இப்பெருமை நிலைபெறவும், பெரும் அளவிலான முதலீடுகளை ஈர்த்துத் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திடவும், மாநிலத்தில் பரவலான வளர்ச்சியை உறுதி செய்திடவும், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030-ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இலக்கினை விரைவில் அடைவதற்காகவும் தமிழ்நாடு அரசின் தொழில் துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இப்பயணத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சான் பிரான்சிஸ்கோ, சிகாகோவில், உலகின் 14 முன்னணித் தொழில் நிறுவனங்களுடன் ரூ.4,350 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களைச் சந்தித்துத் தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

அதன் தொடர்ச்சியாக, 09.09.2024 அன்று சிகாகோவில், ஜாபில், ராக்வெல் ஆட்டோமேஷன், ஆட்டோடெஸ்க் நிறுவனங்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விவரங்கள்:

ஜாபில் நிறுவனம் (Jabil Inc.)

ஜாபில் நிறுவனமானது, ஆப்பிள், சிஸ்கோ, ஹெச்பி, டெல் போன்ற முன்னணி நிறுவனங்களுக்கு எலக்ட்ரானிக்ஸ் தொழில் உற்பத்திச் சேவைகள், தீர்வுகளை வழங்குபவர்களில் முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனம் சீனா, இந்தியா, மலேசியா, மெக்சிகோ, சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகளில் உற்பத்தி நிறுவனங்களைக் கொண்டுள்ளது. ஜாபில் நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

ஜாபில் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஜாபில் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே ரூ.2,000 கோடி முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளியில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் ஜாபில் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் திரு. மேட் கிரவுலி, முதுநிலை இயக்குநர் திரு. நித்து சின்கா மற்றும் திரு. பி.ஜெ. ஃபேரன்காப் ஆகியோர் பங்கேற்றனர்.

ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனம் (Rockwell Automation)

ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனமானது, தொழிற்துறை ஆட்டோமேஷன், டிஜிட்டல் மாற்றத்திற்கான (Industrial Automation and Digital transformation) உலகின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின் விஸ்கான்சின்னிலுள்ள மில்வாக்கியில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே ரூ.666 கோடி முதலீட்டில் காஞ்சிபுரத்தில் மின்னணு உற்பத்தி நிறுவன விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்தின் தலைவர், முதன்மை செயல் அலுவலர் திரு. பிளேக் மோரெட்,

ஆட்டோ டெக்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

முதுநிலை துணைத் தலைவர் திரு. ராபர்ட் பட்டர்மோர், துணைத் தலைவர் திரு. எட்வர்ட் மோர்லான்டு, இயக்குநர் திரு. முத்துகுமரன் பிச்சை ஆகியோர் பங்கேற்றனர்.

ஆட்டோடெஸ்க் நிறுவனம் (Autodesk)

ஆட்டோடெஸ்க் நிறுவனமானது ஒரு அமெரிக்க பன்னாட்டு நிறுவனமாகும். இந்நிறுவனம் கட்டடக்கலை, பொறியியல், கட்டுமானம், உற்பத்தி, ஊடகம், கல்வி, பொழுதுபோக்குத் தொழில்களுக்கான மென்பொருள் தயாரிப்புகள், சேவைகளை வழங்கி வருகிறது. ஆட்டோடெஸ்க் நிறுவனத்தில் உலகளவில் 14,000 ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இது ஒரு பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஆட்டோடெஸ்க் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் (MSME), ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வுஒப்பந்தநிகழ்வில்ஆட்டோடெஸ்க் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் திரு. ஜெப் கிண்டர், துணைத் தலைவர் திரு. கென் ஃபூ ஆகியோர் பங்கேற்றனர்.

ஃபோர்டு நிறுவனம், ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்கள் சந்திப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.09.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், உலகின் முன்னணி கார் உற்பத்தி நிறுவனமான ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் கார் உற்பத்தியை மீண்டும் மேற்கொள்ள வேண்டும் என்றும், அவர்களது உலகளாவிய திறன் மையத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும், அமெரிக்காவில் உள்ள சிறிய, நடுத்தர வணிகங்களுக்கான தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனங்களின் மிகப்பெரிய கூட்டமைப்பான ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

தமிழ்நாடு உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக விளங்குவதோடு, அதிக தொழிற்சாலைகளுடன் இந்திய அளவில்

ஃபோர்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

முன்னணி மாநிலமாகவும் விளங்குகிறது. தமிழ்நாட்டில் அதிகளவிலான தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில், உலக தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறை சார்ந்த தொழில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருவதுடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள், புத்தாக்கத் திட்டங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற புதிய திட்டங்களை பெருமளவில் ஈர்த்திட துறைசார்ந்தக் கொள்கை அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புகளைக் கொண்ட தமிழ்நாட்டில், இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாட்டிற்குத் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ, சிகாகோவில் உலகின் 16 முன்னணி நிறுவனங்களுடன் ரூ.7,016 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களைச் சந்தித்துத் தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, 10.09.2024 அன்று சிகாகோவில் ஃபோர்டு நிறுவனம், ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன் விவரங்கள்:

ஃபோர்டு மோட்டார் நிறுவனம் (Ford Motor)

ஃபோர்டு நிறுவனம் உலகெங்கிலும் செயல்படும் இரண்டாவது பெரிய அமெரிக்க ஆட்டோமொபைல் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகும். ஃபோர்டு மோட்டார் நிறுவனம் அமெரிக்காவின் மிச்சிகனில் உள்ள டியர்பார்னை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. ஃபோர்டு அதன் உலகளாவிய தொழில்நுட்பம், வணிகத் தீர்வு மையத்தைச் சென்னையில் கொண்டுள்ளது,

ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தின் உயர் அலுவலர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் கார் உற்பத்தியை மீண்டும் மேற்கொள்ள வேண்டும் என்றும், அவர்களது உலகளாவிய திறன் மையத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பு நிகழ்வில், ஃபோர்டு நிறுவனத்தின் IMG தலைவர் திருமதி கே ஹார்ட், துணைத் தலைவர் (சர்வதேச அரசாங்க விவகாரங்கள்)

ஐடிசர்வ் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் சந்திப்பு

திரு. மேத்யூ கோட்லெவ்ஸ்கி, ஃபோர்டு இந்தியா இயக்குநர் (அரசாங்க விவகாரங்கள்) டாக்டர் ஸ்ரீபாத் பட் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

ஐடிசர்வ் கூட்டமைப்பு (ITServe Alliance)

ஐடிசர்வ் கூட்டமைப்பு அமெரிக்காவில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனங்களின் மிகப்பெரிய கூட்டமைப்பாகும். இந்தக் கூட்டமைப்பானது 2,400 உறுப்பினர் நிறுவனங்களுடன் 23 மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. இது வணிக-நட்பு கொள்கைகளுக்காகச் சட்டரீதியாக துணை புரிகிறது, நெட்வொர்க்கிங் வாய்ப்புகளை வளர்க்கிறது, CSR மற்றும் STEM முயற்சிகள் மூலம் உள்ளூர்ச் சமூகங்களை மேம்படுத்துகிறது. ஐடிசர்வ் கூட்டமைப்பு உயர்திறமைப் பணியாளர்களின் குடியேற்றத்திற்கு சட்ட உதவிகளை புரிகிறது.

ஐடிசர்வ் கூட்டமைப்பின் உயர் அலுவலர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஐடிசர்வ் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் திரு. ஜெகதீஸ் மொசாலி, இயக்குநர்கள் திரு. சிவ மூப்பனார், திரு. சம்ப மொவ்வா, சிகாகோ பிரிவு தலைவர் திரு. சதீஷ் யலமஞ்சிலி, உயர் அலுவலர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் திறன்மிகுந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் ரூ.500 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 11.09.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் ரூ.500 கோடி முதலீட்டில், திருவள்ளூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அந்நிறுவனத்தின் தற்போதுள்ள கட்டுமானக் கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்திய அளவிலான கவனத்தை மட்டுமல்ல–உலக அளவிலான கவனத்தையும் தமிழ்நாடு பெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டு காலத்தில் ஏராளமான தொழில் நிறுவனங்கள்

கேட்டர்பில்லர் நிறுவனத் தலைமைச் செயல் அலுவலருடன் சந்திப்பு

தமிழ்நாட்டிற்கு வந்து கொண்டு இருப்பதே இதற்குச் சான்றாகும். தமிழ்நாட்டில் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் நாட்டின் சராசரியைவிட மிக அதிகமாக உள்ளதோடு, திறன்மிக்க பணியாளர்களையும் தமிழகம் பெற்றுள்ளது பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது. மேலும், தமிழ்நாடு அதிக முதலீடுகளைத் தொடர்ந்து ஈர்க்கின்ற வகையில், உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுடன் துறைசார்ந்த தொழில் பூங்காக்களையும் அமைத்து வருகிறது.

2030-ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டை 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்று உயரிய இலக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்து, அந்த இலக்கை அடைவதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் மேற்கொண்டு வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ, சிகாகோவில் உலகின் 16 முன்னணி நிறுவனங்களுடன் ரூ.7,016 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்துத் தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக 11.09.2024 அன்று சிகாகோவில், கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம்:

கேட்டர்பில்லர் நிறுவனம் (Caterpillar Inc.,)

கேட்டர்பில்லர் நிறுவனம், கட்டுமானம், சுரங்க கருவிகள், ஆஃப்-ஹைவே டீசல் மற்றும் இயற்கை எரிவாயு இயந்திரங்கள், தொழில்துறை எரிவாயு விசையாழிகள், டீசல்-எலக்ட்ரிக் இன்ஜின்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் உலகின் முன்னணி

கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

நிறுவனமாகும். இந்நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

இந்நிறுவனம் கட்டுமானத் தொழில்கள், வளத் தொழில்கள், எரிசக்தி, போக்குவரத்து, நிதி தயாரிப்பு பொருட்கள் ஆகிய நான்கு வணிகப் பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கேட்டர்பில்லர் நிறுவனம் டிராக்டர்கள் முதல் ஹைட்ராலிக் அகழ்வாராய்ச்சிகள், பேக்ஹோ ஏற்றிகள், மோட்டார் கிரேடர்கள், ஆஃப்-ஹைவே டிரக்குகள், வீல் லோடர்கள், விவசாய டிராக்டர்கள், என்ஜின்கள் ஆகியவற்றின் இயந்திரங்களை தயாரித்து வருகின்றன. இந்த இயந்திரங்கள் கட்டுமானம், சாலை அமைத்தல், சுரங்கம், வனவியல், எரிசக்தி, போக்குவரத்து, பொருட்களைக் கையாளும் தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிறுவனத்தின் உலகளாவிய தலைமையகம் அமெரிக்க நாட்டின் டெக்சாஸில் உள்ள இர்விங்கில் அமைந்துள்ளது.

கேட்டர்பில்லர் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கேட்டர்பில்லர் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே ரூ.500 கோடி முதலீட்டில், திருவள்ளூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தற்போதுள்ள கட்டுமான கருவிகள் உற்பத்தி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், கேட்டர்பில்லர் நிறுவனத்தின் இயக்குநர் திரு.புவன் அனந்தகிருஷ்ணன், முதுநிலைத் துணைத் தலைவர் திரு. கெர்க் எப்லர், உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

RGBSI நிறுவனத்துடன் ரூ,100 கோடி முதலீட்டில் ஒசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 12.09.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், RGBSI நிறுவனத்துடன் ரூ.100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

உற்பத்தி. உட்கட்டமைப்பு வளர்ச்சியில் அதிகமான தனியார், பொதுத்துறை முதலீட்டை ஈர்த்து, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச்சியை

தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி வருகிறது. சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்ற கோட்பாட்டைக் கடைப்பிடித்து வருவதன் காரணமாக உயர்கல்வியில் மொத்த சேர்க்கையில் நாட்டிலேயே அதிகபட்ச விகிதத்தை அடைந்தும், பன்முகத்திறன் கொண்ட சிறப்பான மனிதவளத்தை உருவாக்கியும், நாட்டின் மிகப்பெரிய உற்பத்தித் தளமாகவும், அறிவுசார் பொருளாதாரமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது.

முதலீடுகளைப் பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடவும், மாநிலப் பொருளாதாரத்தை மேலும் வலுவடையச் செய்திடவும், 2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்து, அதனை அடைய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைவதற்கு உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பெருமளவு முதலீடுகளை ஈர்த்திட வேண்டும். அதேபோல அதிக அளவில் வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய தொழில்நுட்பம், மூலதன தீவிரத் துறைகளிலும் சமச்சீரான முதலீடுகளை ஈர்ப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இப்பயணத்தின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் அமெரிக்க நாட்டின் சான் பிரான்சிஸ்கோ, சிகாகோவில் உலகின் 17 முன்னணி நிறுவனங்களுடன் ரூ.7,516 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, உலகளவில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் உயர் அலுவலர்களை சந்தித்துத் தமிழ்நாட்டில் புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக 12.09.2024 அன்று சிகாகோவில், RGBSI நிறுவனத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம்:

Rapid Global Business Solutions, Inc. (RGBSI) நிறுவனம்

RGBSI நிறுவனம், பல்வேறு தொழில் நிறுவனங்களுக்குப் பணியாளர் மேலாண்மை, பொறியியல், தரமான வாழ்க்கைச் சுழற்சி மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்ப தீர்வுகளையும், பல துறைகளுக்கான மேம்பட்ட மின்னணு, தொழில்நுட்பத் தீர்வுகளையும் வழங்கும் நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின், மிச்சிகனில் உள்ள ட்ராயில் அமைந்துள்ளது.

RGBSI நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் RGBSI நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே ரூ.100 கோடி முதலீட்டில் ஓசூரில் மேம்பட்ட மின்னணு மற்றும் டெலிமாடிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், RGBSI நிறுவனத்தின் தலைவர், முதன்மை செயல் அலுவலர் டாக்டர் நானுவா சிங், தலைவர், முதன்மை அலுவலர் திரு. ரவிக்குமார், உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

ரூ.7,616 கோடி முதலீட்டில் 19 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

தமிழ்நாட்டிற்குத் புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்க நாட்டிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு 14.09.2024 அன்று சென்னை திரும்பிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் ஆற்றிய உரை.

அனைவருக்கும் வணக்கம்!

நீங்கள் எல்லோரும் நல்லா இருக்கிறீர்களா?

அமெரிக்க நாட்டிற்குச் சென்று அரசுமுறைப் பயணத்தை நிறைவு செய்து சென்னை திரும்பி இருக்கிறேன். இது

சிகாகோவிலிருந்து அமெரிக்கவாழ் தமிழர்கள் வழியனுப்பி வைத்தபோது...

வெற்றிகரமான பயணமாகவும், இன்னும் சொல்லப்போனால் ஒரு சாதனைக்குரிய பயணமாகவும் அமைந்திருந்தது. தனிப்பட்ட எனக்கு அல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கான ஒரு சாதனைப் பயணமாக இந்தப் பயணம் அமைந்திருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உலக நாடுகளில் இருக்கக்கூடிய தொழில் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்களுடைய தொழில்களைத் துவங்குவதற்கு தொழில் முதலீடுகளைச் செய்ய வைப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக கடந்த 28.08.2024 அன்று நான் அமெரிக்கா சென்றேன். 12.09.2024 வரை அங்கே இருந்திருந்தேன். இந்த 14 நாட்களும் மிகப் பெரிய பயனுள்ளதாக இந்தப் பயணம் அமைந்திருந்தது.

தலைசிறந்த 25 நிறுவனங்களுடன் சந்திப்பு

உலகின் புகழ் பெற்ற தலைசிறந்த 25 நிறுவனங்களுடன் நான் சந்திப்பை நடத்தியிருக்கிறேன். இதில் 18 நிறுவனங்கள், பார்ச்சூன் 500 நிறுவனங்கள் ஆகும். இந்தச் சந்திப்புகளின் போது, 19 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் நான் பகிர்ந்து கொள்கிறேன்.

சான் பிரான்சிஸ்கோவில் 8 நிறுவனங்களுடனும், சிகாகோவில் 11 நிறுவனங்களுடனும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இந்த 19 ஒப்பந்தங்கள் மூலமாக 7 ஆயிரத்து 616 கோடி முதலீடு தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறது. இதன் மூலம் 11 ஆயிரத்து 516 பேருக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இந்த முதலீடுகள், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் என்று பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன.

கடந்த 29.08.2024 அன்று சான் பிரான்சிஸ்கோ நகரில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. இதில் 100-க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள், நிறுவனத் தலைவர்கள் பங்கேற்றார்கள்.

தமிழ்நாடு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை நோக்கி முன்னேறுவதற்கான பணியில் பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று இந்த நிறுவனங்களை நான் கேட்டுக் கொண்டேன். இன்னும் பல நிறுவனங்கள் வருங்காலத்தில் தமிழ்நாட்டுக்கு வருவதாக விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

கூகுள் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல, தமிழ்நாட்டில் 30 ஆண்டு காலமாகச் செயல்பட்டு, தவிர்க்க இயலாத சில சூழ்நிலைகளால் உற்பத்தியை நிறுத்திய ஃபோர்டு நிறுவனம், எங்களது வேண்டுகோளை ஏற்று, சென்னை மறைமலை நகரில் உள்ள தொழிற்சாலையில் மீண்டும் உற்பத்தியைத் துவக்க முன்வந்துள்ளது. அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு பேசும்போது, அந்த நிறுவனத்தைச் சார்ந்தவர்கள்

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுடன் உரையாடல்...

என்ன சொன்னார்கள் என்றால், கமிட்டி அமைத்து, உறுப்பினர்களுடன் பேசிவிட்டு அதற்குப் பிறகு சொல்கிறோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நாங்கள் எங்களுடைய விருப்பத்தை அதிகமாகத் தெரிவித்த காரணத்தினால் அனைத்து வசதிகளும் உங்களுக்குச் செய்து கொடுக்கிறோம் என்ற அந்த நம்பிக்கையை ஏற்றுக்கொண்டு, சரி நீங்கள் செல்லுங்கள், இரண்டு நாட்களுக்குப் பிறகு அதற்கான மகிழ்ச்சியான செய்தியை நிச்சயம் அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். நாங்கள் சிகாகோ விமான நிலையத்தில் விமானத்தில் உட்கார்ந்த பிறகு அறிவித்துவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது. அந்தச் செய்தியை இன்றைக்கு உங்களுடன் நான் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறேன். தமிழ்நாடு அரசு சார்பிலும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் இந்த முடிவை மகிழ்ச்சியோடு வரவேற்று, அவர்கள் உற்பத்தியைத் துவங்குவதற்கான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு நான் ஆணையிட்டிருக்கிறேன்.

அதேபோல, எனது கனவுத் திட்டமான, 'நான் முதல்வன்' திட்டத்தின் வழியாக தமிழ்நாட்டு இளைஞர்களுக்குத் திறன் மேம்பாடு மேற்கொண்டு, அதன் மூலம் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு, தொழில் நுட்பம் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கூகுள் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

முதலீட்டாளர்கள் முதலீடுகளை மேற்கொள்ள உகந்த மாநிலம்

ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் (MSME), ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்மூலம், தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கும், வணிகம் புரிவதற்கும் உகந்த சூழ்நிலையை நிலவுவது மட்டுமல்லாமல், உலகெங்கிலும் இருக்கக்கூடிய முதலீட்டாளர்கள் முதலீடு மேற்கொள்ள விரும்பும் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்ந்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ளது.

31.08.2024 அன்று சான் பிரான்சிஸ்கோவிலும், 07.09.2024 அன்று சிகாகோ நகரிலும் நடைபெற்ற தமிழ் கூட்டமைப்பு, தமிழ் சங்கங்களின் சார்பில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினேன். இது தமிழ்நாட்டில் நான் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. அமெரிக்க தமிழ் அமைப்புகள் அனைத்துக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பந்தங்கள் செய்துள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ●

தமிழ்நாட்டின் நலன்காக்க பல்வேறு கோரிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.09.2024 அன்று புதுதில்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களைச் சந்தித்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்திட தேவையான ஒன்றிய அரசின் நிதி, சமக்ரசிக்ஷா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தரத் தீர்வு ஆகிய மூன்று முக்கிய விஷயங்கள் குறித்த கோரிக்கை மனுவை வழங்கினார்.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
புதுதில்லியில்
மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திரு. **நரேந்திர மோடி** அவர்களைச்
சந்தித்து கோரிக்கைகள் அடங்கிய
மனுவினை அளித்தார்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் II– ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சமவீத மூலதனப் பங்களிப்பு அடிப்படையில் ஒப்புதல்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் தலா 50 சதவிகித பங்கு மூலதனத்தைக் கொண்ட ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாகும். வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் செயலாளர் இதன் தலைவர் ஆவார். 54.1கி.மீ மொத்த நீளத்துடன் இரண்டு வழித்தடங்களுடன் கூடிய சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I ஐ ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சமவீத மூலதனப் பங்களிப்புடன் செயல்படுத்தியுள்ளது.

பொதுப் போக்குவரத்தினை உயர்த்திட வேண்டிய தேவையைக் கண்டறிந்து, தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-IIற்கு ஒப்புதல் அளித்து, 50:50 என்ற சமவீத மூலதனப் பங்களிப்புடன் ஒப்புதல் வழங்கவும், இருதரப்பு, பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெறுவதற்கும், ஒன்றிய அரசிற்குப் பரிந்துரை செய்திருந்தது. ஒன்றிய அரசின் பங்களிப்பு வரப்பெறாத காரணத்தினால் பணிகளில் கடந்த ஆண்டு முதல் ஏற்பட்ட வேகக் குறைவு, நடப்பு நிதியாண்டிலும் பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் இந்த ஆண்டின் மொத்த திட்டச் செலவினம் ரூ.8,000 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, பல்வேறு நிலைகளில் பணி நிறைவடையும் தேதிகள் ஒரு ஆண்டளவிற்கு தாமதமாகி, இறுதியாகக் கட்டிமுடிக்கும் தேதியை டிசம்பர் 2027-லிருந்து டிசம்பர் 2028 ஆக தள்ளி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது, மிகுதியான காலம் மற்றும் செலவின அதிகரிப்பை ஏற்படுத்திவிடும்,

இந்தியாவிலுள்ள பெரும்பாலான மெட்ரோ இரயில் திட்டங்களுக்கு ஒன்றிய அரசு சமவீத மூலதனப் பங்களிப்பு அடிப்படையில் நிதி வழங்கியுள்ளதை இங்குக் குறிப்பிடுவது முக்கியமாகக் கருதப்படுகிறது. ஆகையால் இந்தப் பொருள் குறித்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் -II ற்கு ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் 50:50 என்ற சமவீத மூலதனப் பங்களிப்புடன், கட்டம்-I ற்கு வழங்கப்பட்டது போன்றும், பொது முதலீட்டுக் குழு பரிந்துரைத்துள்ளவாறும் விரைவில் ஒப்புதல் வழங்குமாறு தனது கோரிக்கை மனு மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைச் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டிற்கான சமக்ரசிக்க்ஷா திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு கோருதல்

தமிழ்நாட்டில் சமக்ரசிக்க்ஷா திட்டமானது 2018-ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது பள்ளி முன்பருவக் கல்வி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை கல்வி வழங்கும் வகையில் அமைந்துள்ளது. இத்திட்டம் பள்ளிக் கல்வித் துறையில் விரிவான முன்னெடுப்புகளை மேற்கொள்ளத் தக்க வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடானது, ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் திட்ட ஏற்பளிப்புக்குழுவால் ஏற்பளிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஏற்பளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடானது ஒன்றிய, மாநில அரசால் 60:40 என்ற விகிதத்திலான பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசின் நிதி பங்களிப்புடன் பள்ளிக் கல்வித் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் சமக்ரசிக்க்ஷா திட்டம் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் பயின்று வரும் 43,94,906 மாணவர்கள், 2,21,817 ஆசிரியர்கள், 32,701 அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்கான நிதி விடுவிக்கப்படவில்லையெனில் ஒன்றிய அரசானது மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் மிகவும் முனைப்புடன் செயல்பட்டு வரும் மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டிற்கு வழங்கிடும் முக்கியத்துவத்தைக் குறைப்பதாகவே அமைந்திடும். எனவே, தமிழ்நாட்டின் நியாயமான இக்கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்துத் தேசிய கல்விக் கொள்கை 2020இல் வரையறுக்கப்பட்டுள்ள மும்மொழிக் கோட்பாட்டினை வலியுறுத்துவதை மறுபரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் மும்மொழிக் கோட்பாடு சார்ந்து ஏற்கெனவே தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள அரசமைப்பு ரீதியான பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு, பி.எம்.ஸ்ரீ பள்ளிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உட்பிரிவில் உரிய திருத்தம்

கோரிக்கை மனு தொடர்பாக விளக்கமளித்தல்...

மேற்கொள்ளப்படின், தமிழ்நாடு மாநிலமும் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ள ஏதுவாக அமையும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டில் கல்வி பயிலும் 43,94,906 மாணவர்களின் எதிர்கால நலன்கருதி அவர்களின் கல்வி நலன் பாதிக்காத வகையில், பி.எம்.ஸ்ரீ பள்ளிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்வது சார்ந்த இறுதி முடிவுகள் எட்டப்படும் வரை காத்திராமல், ஏற்கெனவே சமக்ரசிக்க்ஷா திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும் திட்டப் பணிகளுக்கான நிதியினை உடன் விடுவித்திடுமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளைப் பாதுகாக்கவும், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள், அவர்களின் மீன்பிடிக் கலன்களை விடுவிப்பதற்கும் நிரந்தர தீர்வு ஏற்படுத்துதல்.

தமிழ்நாடு 1076 கி.மீ. நீளம் கொண்ட கடற்கரையையும், வாழ்வாதாரத்திற்காக மீன்பிடிப்பைத் தொழிலாகக் கொண்டுள்ள மிகப்பெரும் கடலோர சமுதாயத்தையும் கொண்டுள்ளது. சமீப காலமாக அடுத்தடுத்து இந்திய மீனவர்கள் மீன்பிடி கலன்களுடன் இலங்கை அரசால் கைது செய்யப்படுகின்றனர். நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் இந்தப் பிரச்சனையின் காரணமாகத் தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஏழை மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

2018-ஆம் ஆண்டுக்கு பிறகு சிறைபிடிக்கப்பட்ட 191 மீன்பிடிப் படகுகளின் தற்போதைய நிலை இதுவரை அறியப்படாமல் உள்ளதால் அலுவலர்கள், மீனவர்கள் அடங்கிய குழு படகுகளை ஆய்வுசெய்ய அனுமதியினை பெற்றுத் தருமாறும் ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்ட படகுகளை நாட்டுடமையாக்கப்படும் கொள்கையால், இலட்சக்கணக்கான தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம், அவர்களின் குடும்பங்களின் எதிர்காலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் ஏழை மீனவர்கள் மீது இலங்கை நீதிமன்றங்கள் மிக மிக அதிகப்படியான அபராதத் தொகையினை விதித்து வருகிறது. எனவே, இதனை அரசாங்க ரீதியிலான பேச்சு வார்த்தை மூலம் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்திய இலங்கைக் கூட்டு பணிக்குழு கூட்டம் 2024ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதி கொழும்புவில் நடைபெற உள்ளதாக அறியப்படுகிறது. எனவே, 2016ஆம் ஆண்டுக்குப் பிறகு இரு நாட்டு மீனவர்கள் இடையே பேச்சுவார்த்தை நடைபெறாத நிலையில், இக்கூட்டத்தினையும் உடனடியாகச் கூட்டிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனுவில் கோரிக்கை வைத்துள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த முக்கிய பிரச்சனையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு நிரந்தரத் தீர்வு காணுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அத்துடன் கைது செய்யப்பட்டுள்ள 145 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தனது மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களிடமிருந்து கோரிக்கை மனுவினைப் பெற்றுக்கொண்ட மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள், மேற்படி கோரிக்கைகள் குறித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.09.2024 அன்று புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் செய்தியாளர்கள் சந்திப்பு

டெல்லி ஊடகவியலாளர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களைச் சந்திப்பதற்காக நேற்று டெல்லிக்கு வந்தேன். இன்றைக்கு காலையில் மாண்புமிகு பிரதமர் அவர்களை சந்தித்தேன். இந்த சந்திப்பு, இனிய சந்திப்பாக அமைந்தது. பிரதமர் அவர்கள் எங்களிடம் மகிழ்ச்சியுடன் பேசினார். இந்த மகிழ்ச்சியான சந்திப்புப் பயனுள்ள சந்திப்பாக மாற்ற வேண்டியது மாண்புமிகு பிரதமர் அவர்களுடைய கையில்தான் இருக்கிறது.

ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று மூன்று முக்கியமான கோரிக்கைகளை நான் அவரிடத்தில் வலியுறுத்தி இருக்கிறேன். தலைப்புச் செய்திகளாக நான் சொன்னாலும், அதனுடைய சாரம்சம் முழுமையாக, தெளிவாக எங்களுடைய கோரிக்கைகளை நாங்கள் எழுதி அவரிடத்தில் நாங்கள் ஒப்படைத்திருக்கிறோம். தலைப்புச் செய்திகளாக நானும் உங்களிடத்தில் சொல்ல விரும்புவது,

முதலில், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் ஒன்றிய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தியது போலவே, இரண்டாவது கட்டப் பணிகளையும் செயல்படுத்தவேண்டும் என்பது தமிழ்நாட்டின் நிலைப்பாடு.

இந்த இரண்டாவது கட்டப் பணிகள் காலதாமதமின்றி மேற்கொள்வதற்காக, 2019-ஆம் ஆண்டு, மாநில அரசின் நிதியிலிருந்தும், கடன் பெற்றுப் பணிகளை துவக்கி, பின்பு ஒன்றிய அரசோடு இணைந்து செயல்படுத்தும் திட்டமாகச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் பெறுவதற்கு முடிவு செய்யப்பட்டது. மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள் இதனை ஏற்றுக்கொண்டு, 2020-ஆம் ஆண்டில் இதற்கு அடிக்கல் நாட்டி பணிகள் துவங்கப்பட்டன.

மெட்ரோ இரயில் திட்டப்பணித் தொய்வு

மாண்புமிகு ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள், இதற்கான ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கப்படும் என்று 2021-2022-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்தார்கள். இதைத் தொடர்ந்து, ஒன்றிய அரசின் திட்ட முதலீட்டு வாரியம், இதற்கான ஒப்புதலை, 2021-ஆம் ஆண்டே வழங்கியது. இந்தப் பணிகளுக்கு, இதுவரை 18 ஆயிரத்து 564 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருந்தாலும், இதுவரைக்கும் ஒன்றிய அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்படாத காரணத்தால், இதற்கான ஒன்றிய அரசின் நிதி, தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்படவில்லை. இதனால், மெட்ரோ ரயில் திட்டப் பணிகளில் தொய்வு ஏற்பட்டிருக்கிறது. எனவே, தாமதமின்றி இந்த நிதியை உடனடியாக வழங்கப்படவேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக, ஒன்றிய அரசு 60 விழுக்காடு நிதியையும், தமிழ்நாடு அரசு 40 விழுக்காடு நிதியையும் அளித்துச் செயல்படுத்தக்கூடிய ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின்கீழ், இந்த நிதியாண்டில் ஒன்றிய அரசு வழங்க வேண்டியது

2,152 கோடி ரூபாய். இந்தத் தொகையில், முதல் தவணை இதுவரைக்கும் தமிழ்நாட்டுக்கு வழங்கப்படவில்லை.

இந்தத் திட்டத்தின்கீழ்க் கையெழுத்திடப்பட வேண்டிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ்நாடு அரசு கையெழுத்திடாததே இதற்குக் காரணம் என்று ஒன்றிய அரசு தெரிவித்திருக்கிறது.

தேசியக் கல்விக் கொள்கையின் பல நல்ல கூறுகளை, ஏற்கனவே தமிழ்நாடு அரசு செயல்படுத்தியிருக்கிறது. செயல்படுத்திக் கொண்டும் வருகிறது.

தேசியக் கல்விக் குழு

காலை உணவுத் திட்டம் போல, மற்ற மாநிலங்களில் செயல்படுத்தப்படாத பல முன்னோடித் திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. ஆனால், தேசியக் கல்விக் குழுவின் ஒரு விதிமுறையான மும்மொழிக் கொள்கையைப் பின்பற்ற தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளவில்லை. எந்த ஒரு மாநிலத்தின் மீதும், மொழித் திணிப்பு இருக்காது என்று தேசியக் கல்விக்கொள்கை உறுதியளித்திருந்தாலும், இந்தத் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதற்கான ஷரத்து இல்லை. எனவே. இந்த ஒப்பந்தம் திருத்தப்படவேண்டும் என்று ஒன்றிய அரசிடம் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

இந்தச் சூழ்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படாததை காரணம் காட்டி, ஒன்றிய அரசு நிதியை விடுவிக்காததால், ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியாமல், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்ற சூழல் உருவாகியிருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். உடனடியாக இந்தத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் நிதி அளிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம்.

மீனவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகள்

மூன்றாவதாக, தமிழ்நாட்டு மீனவர்கள் சந்தித்து வருகின்ற வாழ்வாதாரப் பிரச்சனைகள் குறித்து விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். Detail-ஆக சொல்லியிருக்கிறோம். நம்முடைய பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில், மீன் பிடிக்கப் போகும் நம்முடைய மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் சிறைப்பிடித்துத் துன்புறுத்துகிறார்கள். இதுபற்றி மாண்புமிகு பிரதமரிடமும், மாண்புமிகு வெளியுறவுத்துறை அமைச்சரிடமும் நான் பலமுறை வலியுறுத்தியும்,கடிதம் எழுதியும், இந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த ஏழு ஆண்டுகளில் மிக அதிக அளவு எண்ணிக்கையில், இதுமாதிரியான சம்பவங்கள் நடக்கின்றன.

191 மீன்பிடிப் படகுகளும், 145 மீனவர்களும் தற்போது இலங்கை கடற்படையால் சிறைப் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாக நம்முடைய ஒன்றிய அரசு, இலங்கை அரசை வலியுறுத்தி, இந்த மீனவர்களையும், அவர்களுடைய மீன்பிடிப் படகுகளையும் மீன்பிடிக் கருவிகளையும் உடனடியாக விடுவித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

இந்தியக் கூட்டுக் குழுக்கூட்டம்

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெற இருக்கும், இந்திய – இலங்கை நாடுகளுக்கு இடையேயான கூட்டுக்குழு கூட்டத்தில் இதுபற்றி விவாதித்து இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியிருக்கிறோம்.

இலங்கையில், புதிய அரசு அமைந்திருக்கிறது. புதிய அதிபரிடம் இந்தக் கோரிக்கையை இந்திய ஒன்றிய அரசு வைக்கவேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறேன்.

இந்த மூன்று முக்கிய கோரிக்கைகளையும் கவனமாகக் கேட்டுக்கொண்ட மாண்புமிகு பிரதமர் அவர்கள், இதுபற்றி விரைவாக கலந்தாலோசித்து முடிவுகளைத் தெரிவிப்பதாக உறுதி அளித்திருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்க தேவையான இந்த முக்கிய கோரிக்கைகளை மாண்புமிகு பிரதமர் அவர்கள் நிறைவேற்றுவார் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டிற்கு ஏராளமான கோரிக்கைகள் இருக்கின்றன. அதையெல்லாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்; தொடர்ந்து வலியுறுத்தப் போகிறோம். இந்த மூன்று கோரிக்கைகளை மையப்படுத்தித்தான் இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ■

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சராக திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நியமனம் மற்றும் மாண்புமிகு புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு 28.09.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் பரிந்துரையின்படி, தமிழ்நாடு அமைச்சரவை 28.09.2024 அன்று மாற்றம் செய்யப்பட்டு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களைத் துணை முதலமைச்சராகவும், புதிதாக நான்கு அமைச்சர்களை நியமித்தும், ஆறு அமைச்சர்களுக்கு இலாகாக்கள் மாற்றம் செய்தும் மாண்புமிகு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் ஒப்புதல் வழங்கினார்.

29.09.2024 அன்று ஆளுநர் மாளிகையில், நடைபெற்ற பதவியேற்பு விழாவின்போது, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களிடம்,

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி.செந்தில் பாலாஜி அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், புதிய அமைச்சர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், திரு. வி.செந்தில் பாலாஜி அவர்களுக்கு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சராகவும், திரு. சா.மு.நாசர் அவர்களைச் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சராகவும், முனைவர் கோவி. செழியன் அவர்களை உயர்கல்வித் துறை அமைச்சராகவும், திரு. ஆர்.இராஜேந்திரன் அவர்களைச் சுற்றுலாத் துறை அமைச்சராகவும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின்படி, மாண்புமிகு அமைச்சர்கள் முனைவர் க. பொன்முடி அவர்கள் வனத்துறை அமைச்சராகவும், திரு. தங்கம் தென்னரசு அவர்கள் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சராகவும், திரு. ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் அவர்கள் பால்வளத் துறை அமைச்சராகவும், திரு. சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராகவும், மருத்துவர் மா. மதிவேந்தன் அவர்கள் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும், திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சராகவும் மாற்றம் செய்யப்பட்டு இலாகாக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

புதிதாகப் பதவியேற்றுக்கொண்ட நான்கு அமைச்சர்களும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் பூங்கொத்து வழங்கி வாழ்த்துப் பெற்றனர்.

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்கள்

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ஆர்.இராஜேந்திரன் அவர்கள்

ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை, குழு புகைப்படம் எடுத்துக்கொண்டது.

முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் பிறந்த நாள்

படமும்/செய்தியும்

சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், 11.09.2024 அன்று சென்னை கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள, அன்னாரது திருவுருவச் சிலை, திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள், சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இராணிப்பேட்டையில் ரூ.9,000 கோடி முதலீட்டில் 5,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.09.2024 அன்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில். 9,000 கோடி ரூபாய் முதலீடு, 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் வாகன உற்பத்தி ஆலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மாற்றம் பெறுவதற்கும் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அமெரிக்க நாட்டிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு 19 நிறுவனங்களுடன் ரூ.7,616 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. மேலும், அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி என்ற தமிழ்நாடு அரசின் கொள்கைக்கேற்ப, ஈர்க்கப்படும் தொழில் திட்டங்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைக்கப்பட்டு, இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், எஃகு, தகவல் தொழில்நுட்பம், மோட்டார் வாகன உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளில் உலகளவில் சிறப்புடன் செயல்பட்டு வரும் டாடா குழுமத்தின் ஒரு அங்கமான டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தனது புதிய

வாகன உற்பத்தித் தொழிற்சாலையின் மாதிரி வடிவமைப்பினைப் பார்வையிடல்

அதிநவீன மோட்டார் வாகன உற்பத்தி ஆலையை இராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் பனப்பாக்கம் தொழிற்பூங்காவில் 9,000 கோடி ரூபாய் முதலீடு, 5,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்க முன்வந்துள்ளது. இத்திட்டத்தில், 100 சதவிகிதம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்தி, டாடா மோட்டார்ஸ், ஜாகுவார் லேண்ட் ரோவர் (JLR) சொகுசு வாகனங்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. இவ்வாண்டு மார்ச் மாதம் இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுதிடப்பட்ட ஆறு மாதத்திற்குள், இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு துரிதமாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

டாடா குழுமத்தின் துணை நிறுவனங்களான டிசிஎஸ், டைடன், டாடா பவர், டாடா எலெக்ட்ரானிக்ஸ் தாஜ் ஹோட்டல்கள் ஆகியவை ஏற்கெனவே தமிழ்நாட்டில் தடம் பதித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இன்றைய தினம், டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் மேம்பட்ட பயணிகள் வாகன உற்பத்தித்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியிருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டில் உங்கள் தொழில் நிறுவனத்தை விரிவுபடுத்தும் அந்தப் பணிகளை பார்க்கும்போது, நீங்கள் எப்படிப் பெருமையாக நினைக்கிறீர்களோ, அதேபோல, டாடா குழுமம் தமிழ்நாட்டின் மீது எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்திருக்கிறீர்களோ, நாங்களும் அதற்காகப் பெருமைப்படுகிறோம்; மகிழ்ச்சியடைகிறோம்.

இந்தியாவின் பெரிய நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, உலகின் பெரிய நிறுவனங்களுக்கும் தமிழ்நாடுதான் முதல் முகவரியாக விளங்கிக் கொண்டிருக்கிறது!

டாடா குழுமத்தின் தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்கள், இந்த விழாவில் பங்கேற்று இருப்பது நமக்கெல்லாம் கூடுதல் மகிழ்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது! நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர். உலகப் புகழ்பெற்ற நிறுவனத்தின் தலைமைப் பதவியில் இருப்பது அவருக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கே இது கிடைத்திருக்கக்கூடிய பெருமை!

இந்தியாவின் முன்னணி நிறுவனம்

வேளாண் குடும்பத்தில் பிறந்து பெருமைமிகு அரசுப் பள்ளியில் படித்த இவர், இந்தளவுக்கு உயர அவருடைய தன்னம்பிக்கையும், அறிவாற்றலும்தான் காரணம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது!

இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய டாடா நிறுவனத்தின் தலைவராக இருக்கின்ற சந்திரசேகரன் அவர்கள், இந்திய இளைஞர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக அவர் விளங்கிக் கொண்டிருக்கிறார். அத்தகைய தலைசிறந்த மனிதருக்கு என்னுடைய அன்பான வணக்கம்!

இந்தியாவின் தொழில் முகங்களில் முக்கியமானது டாடா நிறுவனம். அவரே குறிப்பிட்டுச் சொன்னார்.

எஃகு, தகவல் தொழில்நுட்பம், விமானப் போக்குவரத்து, ஆட்டோமொபைல், நுகர்வோர் பொருட்கள், விருந்தோம்பல், தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல துறைகளில் தடம் பதித்திருக்கின்ற டாடா குழுமம், உலக அளவில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு வரும் இந்திய பன்னாட்டுக் குழுமம் என்பது நமக்கெல்லாம் பெருமை அளிக்கக்கூடியதாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

டாடா குழுமத்தின் ஒரு அங்கமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற டாடா மோட்டார்ஸ் லிமிடெட், பல நாடுகளில் வாகன உற்பத்தி ஆலைகளை கொண்டுள்ள முன்னணி நிறுவனமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. உங்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் பல ஆண்டுகள் உறவு இருக்கிறது!

தகவல் தொழில்நுட்பத் துறையில், உலக அளவில் சிறந்து விளங்குகின்ற TCS நிறுவனத்தின் உலகின் மிகப்பெரிய டெலிவரி சென்டர் அலுவலகம் சென்னையில்தான் அமைந்திருக்கிறது.

ஹோட்டல் துறையில் தனி அந்தஸ்து பெற்றிருக்கின்ற தாஜ் ஹோட்டல்கள் தமிழ்நாட்டில் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாடு அரசின் டிட்கோ நிறுவனம், டாடா குழுமம் இணைந்து உருவாக்கிய டைட்டன் நிறுவனம், கடிகாரங்கள், கண் பராமரிப்பு பிரிவுகளிலும், தனிஷ்க் ஆபரணங்கள் பிரிவிலும் சிறந்து விளங்குகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் டாடா பவர் என்ற பெயரில் எரிசக்தி திட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் டாடா எலெக்ட்ரானிக்ஸ் எனும் உதிரி பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவப்பட்டிருக்கிறது.

எனது கனவுத் திட்டமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக இணைந்து டாடா நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

- இவை எல்லாம் தமிழ்நாட்டின் மீது நீங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அடையாளங்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

மிக முக்கியமானவர்

டாடா குழுமத்தின் பல்வேறு நிறுவனங்கள் இங்கே இருப்பதால், நம்முடைய மாநிலத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்குக் குறிப்பாக பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து வருகிறது.

இந்த நல்லுறவு மென்மேலும் வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதிவிரைவாக வளர்ந்து கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் இன்று மிக முக்கியமான நாளாக இந்த நாள் விளங்கிக் கொண்டிருக்கிறது.

டாடா மோட்டார்ஸ் தன்னுடைய திட்டத்திற்காக, ராணிப்பேட்டை மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தற்காக நான் முதலில் நன்றி சொல்கிறேன்.

ஒன்பதாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ததுடன், ஐந்தாயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்க இருக்கிறது. இந்தப் பணிகளை விரைந்து முடித்து, திறப்பு விழாவிற்கும் திரு. சந்திரசேகரன் அவர்கள் வரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு வேண்டுகோளும் உண்டு! உங்களுடைய நிறுவனங்கள் மூலமாகக் கூடுதல் முதலீடுகளை நீங்கள் தமிழ்நாட்டில் செய்யவேண்டும். செய்து கொண்டிருக்கிறீர்கள். அதைநான் மறுக்கவில்லை; அது உங்கள் கடமை. ஏனென்றால், இது என் மாநிலம் அல்ல, உங்கள் மாநிலம் அல்ல; நம்முடைய மாநிலம். இது உங்களுடைய மாநிலம்.

நான் அடிக்கடி குறிப்பிடுவது, அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சி! அந்த வகையில், ராணிப்பேட்டை மாவட்டத்தில் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தொழில் தொடங்குவது கூடுதல் மகிழ்ச்சி!

வாகன உற்பத்தி தலைநகரம்

இந்த நேரத்தில் இன்னொரு விஷயத்தையும் நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். 1973-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் இதே ராணிப்பேட்டையில்தான் முதல் சிப்காட்டை தொடங்கினார். ஐம்பது ஆண்டுகள் கடந்து, இங்கே பல்வேறு நிறுவனங்களைப் பார்ப்பது பெருமையாக இருக்கிறது.

தமிழ்நாடுதான் இந்தியாவின் வாகன உற்பத்தித் தலைநகரம்! அதுமட்டுமல்ல, E-Vehicle-களின் தலைநகரம்!

ஃபோர்டு, ஹூண்டாய், ரெனோ நிஸான் என்று சர்வதேச வாகன நிறுவனங்களும் இங்கே இருக்கின்றன. டாடா மாதிரி சர்வதேச மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகின்ற வாகனங்களை தயாரிக்கின்ற தொழிற்சாலையும் இங்கேதான் இருக்கிறது.

கூடுதல் தகவல், இந்தியாவில் விற்பனை செய்யப்படுகின்ற மொத்த மின் வாகனங்களில், 40 விழுக்காடு தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுமட்டுமல்ல, எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் நம்பர் ஒன்!

நிதி ஆயோக் கொடுத்த ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டிலும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன் என்று குறிப்பிட்டிருக்கிறது!

இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகத் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

நேற்றுகூட, தி இந்து நாளேட்டில் ஒரு கட்டுரையை நான் எழுதியிருந்தேன். தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்தன்மை வாய்ந்தது. பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூகநீதியை உள்ளடக்கிய வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், சமத்துவம் போன்ற கொள்கைகள் அடித்தளமாக கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சி என்பதால், தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து சற்றுத் தனித்து இன்றைக்கு ஒளிர்ந்து கொண்டிருக்கிறது என்று அந்தக் கட்டுரையில் நான் குறிப்பிட்டு காட்டியிருந்தேன்.

இங்கே தம்பி டி.ஆர்.பி.ராஜா இருக்கிறார். அவரும் பேசினார். தொழிற்துறைக்கு நான் வழங்கியிருக்கின்ற இலக்கு 2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றவேண்டும். இந்தியாவில் மட்டுமல்ல, தெற்காசியாவிலேயே முதலீடுகள் மேற்கொள்ள சிறந்த மாநிலமாக மேம்படுத்தவேண்டும்.

அந்தப் பயணத்தில் நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 10 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். 31 இலட்சம் நபர்களுக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சி

உலகின் பல்வேறு நாடுகளுக்குப் பயணம் செய்து, முதலீடுகளை நாங்கள் ஈர்த்திருக்கிறோம். முதலீடுகளை ஈர்ப்பது மட்டுமல்ல, அதை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குச் சான்றுதான் இந்த விழா. டாடா மோட்டார்ஸின் இந்தத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்த ஆண்டு மார்ச் மாதம்தான் போடப்பட்டது. ஆறு மாதத்திற்குள் இந்தத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்றைக்கு நடந்திருக்கிறது என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக, தமிழ்நாட்டு இளைஞர்களின் உயர்வுக்காக நம்முடைய திராவிட மாடல் அரசு, அனைத்தையும் செய்யும்! அதற்கு டாடா மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள் எங்களுக்குப் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று நிறைவாக, மதிப்பிற்குரிய திரு. சந்திரசேகரன் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்து, அடுத்து விரைவில் அவர் புதிய தொழிற்சாலையைக் கொண்டுவருவார் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

படமும் / செய்தியும்

சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு

தந்தை பெரியார் அவர்களின் 146ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 16.09.2024 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், அரசு துறைச் செயலாளர்கள், அரசு உயர் அலுவலர்கள், பணியாளர்கள் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

படமும்/செய்தியும்

விடுதலைப் போராட்ட வீரர் திரு. எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்கள் பிறந்த நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.09.2024 அன்று விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் அமைச்சருமான திரு. எஸ்.எஸ். இராமசாமி படையாட்சியார் அவர்களின் 107ஆவது பிறந்தநாளையொட்டி சென்னை, கிண்டியில் அமைந்துள்ள இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவச் சிலைக்குக் கீழ் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 116ஆவது பிறந்த நாள்

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.09.2024 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 116ஆவது பிறந்தநாளை முன்னிட்டுச் சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தந்தைப் பெரியார் அவர்களின் 146ஆவது பிறந்த நாள்

தந்தை பெரியார் அவர்களின் 146ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 17.09.2024 அன்று சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்குக் கீழ் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.35 ஆயிரம் கோடி வங்கிக் கடன் இணைப்புகள் வழங்க இலக்கு

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மாநில அளவிலான மணிமேகலை விருதுகள்,
நகர்ப்புர மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள்,
வங்கியாளர் விருதுகளை வழங்கி ஆற்றிய உரை

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 30.09.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் ஊரகம், நகர்ப்புரங்களில் சிறப்பாக செயல்படும் 70 சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகளுக்கு 2022-2023, 2023-2024ஆம் ஆண்டுகளுக்கான மணிமேகலை விருதுகள், ரூ.1 கோடியே 18 இலட்சம் விருதுத் தொகை, பாராட்டுச் சான்றிதழ்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் 516 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 6,135 உறுப்பினர்களுக்கு ரூ.30.20 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதில் சிறப்பாகச் செயல்படும் 13 வங்கிகள், வங்கிக் கிளைகளுக்கு வங்கியாளர் விருதுகளையும் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியதாவது "தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் நான் பங்கேற்கும் முதல் நிகழ்ச்சியே மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளைக் கௌரவிக்கின்ற நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

ஏதாவது, பட்டமோ, பரிசோ கிடைத்தால், அதை முதலில் தன் தாயிடம் தான் காட்ட வேண்டும் என்று, ஓடி வரும் பிள்ளையைப் போல, தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் எனும் மாபெரும் பொறுப்பை ஏற்ற பின், தாய்மார்களான உங்களைக் காண வருகை தந்திருக்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறந்த முறையில் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி ஊக்குவிக்கும் வங்கிகளுக்கான வங்கியாளர் விருதினை இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு எல்லா வகையில் ஒத்துழைப்பு வழங்கி வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அனைத்து நிலை அதிகாரிகள் அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த சகோதரிகள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள்

தமிழ்நாட்டில் ஊரக வாழ்வாதார இயக்கம், நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுமார் 4 இலட்சத்து 73 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அதில், குறிப்பாக நமது திராவிட மாடல் அரசு பொறுப்புக்கு வந்த கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 14 இலட்சத்து 91 ஆயிரத்து 985 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 750 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதிலிருந்தே மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இந்தத் திராவிட மாடல் அரசு எந்த அளவு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது என்பது உங்களுக்குப் புரியும். இன்னொரு செய்தியை சொன்னால், மகளிர் மேம்பாட்டில் திராவிட மாடல் அரசுக்கு இருக்கும் அக்கறையை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

2011 முதல் 2021 வரை 10 ஆண்டுகள் நடைபெற்ற கடந்த கால ஆட்சியில். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 84 ஆயிரத்து 815 கோடி ரூபாய் மட்டுமே வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டது. ஆனால் நமது திராவிட மாடல் அரசு அமைந்த 2021-2022ஆம் முதல் இந்த நாள் வரை 92 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது, கடந்த கால ஆட்சியான 10 ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் இணைப்புத் தொகையைவிட அதிகமாக திராவிட மாடல் அரசு மூன்றே ஆண்டுகளில் வழங்கியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நமது அரசு ஆட்சி காலத்தில் வழங்கப்பட்டு வந்த மணிமேகலை விருதுகள் கடந்த 10 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகுதான், தற்போது மீண்டும் மணிமேகலை விருதுகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

இதுதான், மகளிர் முன்னேற்றத்தில் நம் திராவிட மாடல் அரசுக்கு இருக்கும் அக்கறைக்கு எடுத்துக்காட்டு.

பெண்களுக்குச் சமூக விடுதலையும் வேண்டும், பொருளாதார விடுதலையும் வேண்டும் என்று ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்பே குரல் கொடுத்தவர் தந்தை பெரியார் அவர்கள். எனவே, பெரியாரின் விருப்பத்தை நிறைவேற்றுவது தானே நமது கடமையாக இருக்க முடியும்.

பெண்களுக்கான அடுக்கடுக்கான திட்டங்கள்

பெண்கள் முன்னேற்றத்திற்கு உதவும் நோக்கில் அடுக்கடுக்கான திட்டங்களை இந்தத் திராவிட மாடல் அரசு மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தியுள்ளது. நமது அரசு பொறுப்பேற்றப் பிறகு நடத்தப்பட்ட உள்ளாட்சித் தேர்தலில் மகளிருக்கு 50 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் மாநகரங்களில் பெண் மேயர்கள், நகராட்சிகளில் பெண் தலைவர்கள், ஊராட்சித் தலைவராக ஆயிரக்கணக்கான பெண்கள் பொறுப்பில் இருக்கிறார்கள். இதற்கு நம் அரசும், நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும்தான் காரணம்.

காலையில் எழுந்து மகளிர் சமைப்பதற்கு சிரமப்படக் கூடாது என்று, தமிழ்நாடு முழுவதும் காலை உணவுத் திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தினார்கள்.

அதே போல, தமிழ் வழியில் பள்ளிப் படிப்பு முடித்துக் கல்லூரிக்கு செல்லும் மாணவிகளுக்கு 'புதுமைப்பெண்' திட்டம் மூலம் மாதம் 1,000 ரூபாய் கல்வி உதவித்தொகை திட்டத்தையும் உங்களை மனதில் வைத்துச் செயல்படுத்தினார்கள்.

இதையெல்லாம் விட, நான் இப்போது குறிப்பிடப் போகும் இரண்டு திட்டங்கள் எவ்வளவு புரட்சிகரமானவை என்பது உங்களுக்கே தெரியும்.

ஒன்று, மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம். பெண்கள் வீட்டை விட்டே வெளியே வரக் கூடாது என்று ஒருகாலத்தில் சொன்னார்கள். அதற்குப் பிறகு, பள்ளிப் படிப்போடு பெண்களை நிறுத்தினார்கள். பெண் பிள்ளைகள் காலேஜ் படிச்சு என்ன பண்ண போகுது என்றார்கள். அந்த நிலையை மாற்றியது திராவிட இயக்கம். நம் திராவிட மாடல் அரசு பெண்களை, மேலும் ஊக்கப்படுத்தும் விதமாகவும், அவர்களுடைய வாழ்க்கைப் பயணத்திற்குத் துணை நிற்கும் விதமாகவும்,, மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மகளிர் மேம்பாட்டிற்கு எடுத்துக்காட்டான மாநிலம்

பெண்ணுரிமைப் போராட்டத்தின் வரலாற்றை தெரிந்தவர்களால் மட்டுமே இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டு வரமுடியும். அந்த வகையில்தான், முதலமைச்சராக பொறுப்பேற்ற முதல் நாளே மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டார்கள்.

அடுத்தது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்கள் உழைக்கிறார்கள், குடும்பத்தைப் பராமரிக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய உழைப்புக்கென்று எந்த ஒரு அங்கீகாரமும் இருந்ததில்லை.

ஆனால், ஒரு குடும்பம் சிறந்து விளங்குவதற்குப் பெண்கள் தான் முதுகெலும்பாய் இருக்கிறார்கள். பெண்களுடைய உழைப்பை அங்கீகரித்து, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்க உத்தரவிட்டார் நமது முதலமைச்சர் அவர்கள்.

இந்த ஓராண்டில் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களின் தாக்கம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று பல்வேறு பொருளாதார ஆய்வாளர்கள் இப்போது ஆய்வு செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே மகளிர் மேம்பாட்டிற்கு எடுத்துக்காட்டான மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்றால், அதற்காக உங்கள் அனைவரையும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட மாடல் பொறுத்தவரை எல்லாத் துறைகளிலும் எல்லாத் திட்டங்களிலும் சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதுதான் அடிப்படை கொள்கை. அதன்படி, எல்லா வகையிலும் ஒடுக்கப்பட்டிருக்கும் பெண்கள் மேலே எழுந்து வர வேண்டும் என்ற நோக்கத்தில் தான் திட்டங்களை உருவாக்குகிறது.

மணிமேகலை விருதுகள்

விளையாட்டா? அதிலும் பெண்கள் நிறைய வர வேண்டும். தொழில்முனைவோரா? அதிலும் பெண்கள் தொழிலதிபர்களாக வர வேண்டும் என்று எல்லா வகையிலும் அக்கறையோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

நமது திராவிட மாடல் அரசு பொறுப்புக்கு வந்த 2021-2022ஆம் ஆண்டு 21 ஆயிரத்து 392 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டது.

அதற்கு அடுத்து 2022-2023ஆம் ஆண்டு 25 ஆயிரத்து 642 கோடியும், சென்ற ஆண்டு 30 ஆயிரத்து 74 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் இலக்கைவிட அதிக அளவு கடன் வழங்கி சாதனை படைப்போம் என்கிற நம்பிக்கையுடன் செயல்பட்டு வருகிறோம். எனவே, மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்துவதை பாராட்டி நமது கடமையாகக் கருதுகிறோம். அந்த வகையில், சிறப்பாகச் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2022-2023, 2023-2024ஆம் ஆண்டுக்கான மணிமேகலை விருதுகளைப் பெற்றுள்ள, சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கும், வங்கிக் கடன் இணைப்புகளைப் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்களுக்கும், சிறப்பாகச் செயல்பட்டு விருதுகளைப் பெற்ற வங்கியாளர்களுக்கும் பாராட்டினையும், வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.” ■

படமும் / செய்தியும்

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

சென்னை, தலைமைச் செயலகத்தில், 14.09.2024 அன்று அரசு தலைமைச் செயலாளர் திரு. முருகானந்தம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, பெருநகரச் சென்னை மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி மற்றும் தாம்பரம் மாநகராட்சி பகுதிகளில், வடகிழக்குப் பருவமழை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், துறை சார்ந்த செயலாளர்கள், காவல் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தெற்காசியாவிலேயே முதன் முறையாக சென்னையில் ஃபார்முலா 4 கார் பந்தயம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இந்தியாவின் முதல் ஃபார்முலா ஒன் பந்தய வீரர் திரு. நரேன் கார்த்திகேயன் அவர்கள் தமிழ்நாடு அரசுக்கு பாராட்டு!

சென்னை ஃபார்முலா ஸ்ட்ரீட்ரேஸிங் சர்க்யூட்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) மூலம் சென்னை ஃபார்முலா 4 ரேஸிங் சர்க்யூட் போட்டி, இந்தியன் ரேஸிங் லீக் கார் பந்தயம் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் இரவு நேர ஸ்ட்ரீட் சர்க்யூட் பந்தயத்தை நடத்தியது. தெற்காசியாவிலேயே இரவு நேர ஃபார்முலா 4 ஸ்ட்ரீட் பந்தயத்தை நடத்தும் முதல் நகரமாகச் சென்னை திகழ்ந்தது.

3.5 கிமீ சுற்றளவு கொண்ட சர்க்யூட் – தீவு திடல், போர் நினைவுச்சின்னம், நேப்பியர் பாலம், சுவாமி

சிவானந்தா சாலை, மவுண்ட் ரோடு ஆகியவற்றில் அமைக்கப்பட்டு, தெற்காசியாவிலேயே மிக நீளமான ஸ்ட்ரீட் சர்க்யூட் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்டு 31ம் தேதி நடைபெற்ற பந்தயம் மதியம் 2.30 மணிக்குத் தொடங்கி JK FLGB F4, F4 Indian Championship, Indian Racing League ஆகிய பந்தயங்களுக்கான பயிற்சிச் சுற்று நடைபெற்றது. அதனை தொடர்ந்து சாகச நிகழ்ச்சி, தகுதி சுற்றும் நடைபெற்றது.

செப்டம்பர் 1ம் தேதி நடைபெற்ற பந்தயம் மதியம் 2.30 மணிக்குத் தொடங்கி JK FLGB F4, F4 Indian Championship, Indian Racing League ஆகிய பந்தயங்கள் நடைபெறும். இதற்கிடையில் சாகச நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு, இந்திய நாடளவில் எதிலும் முதலிடம் பெற வேண்டும் என்னும் தொலைநோக்குச் சிந்தனைகளுடன் புதிய பல திட்டங்களை உருவாக்கி வடிவமைத்து நிறைவேற்றி வெற்றிகளை ஈட்டிப் புகழ் பதித்து வருகிறார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் செயல்பட்டு ஒவ்வொரு களத்திலும் முத்திரைகள் பதித்து வருகிறார். அத்துடன், இளைஞர்களின் அறிவுத் திறன், உடல்திறன் வளர்ச்சிகளுக்கு ஊக்கத்தையும் உந்து சக்தியையும் அளித்து வருகிறார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் முயற்சியால் சென்னையில் உலகையே கவரும் வண்ணம் 31.08.2024 அன்று தொடங்கி சனி, ஞாயிறு இரண்டு நாள்களும் நடைபெற்று முடிந்துள்ள ஃபார்முலா 4 கார் பந்தயம் பல்வேறு தரப்பினரின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்காவிலிருந்து வலைதளப் பதிவில், "ஃபார்முலா 4 சென்னை கார் பந்தயத்தை மாபெரும் வெற்றியடையச் செய்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சேர்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்" என்று குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளார்.

தெற்கு ஆசியாவிலேயே இதுவரை நடைபெறாத மிக நீளமான சாலை கார் பந்தயம் இது என்னும் பெருமை இந்த பார்முலா 4 கார் பந்தயத்திற்கு உண்டு. இந்த 3.5 கி.மீ. நீள கார் பந்தயப் பகுதியில் மொத்தம் 19 வளைவுகள் இருந்தன.

பந்தய இடம் சென்னை மாநகரில் தீவுத் திடலில் தொடங்கி, போர் நினைவுச் சின்னம், நேப்பியர் பாலம், சுவாமி சிவானந்தாசாலை, அண்ணாசாலை வழியாக 3.5 கி.மீ., தூரத்தைக் கடந்து தீவுத் திடலிலேயே வந்து முடிவதாக இருந்தது.

மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், இந்தப் போட்டியை நடத்துவதில் தனிக் கவனம் செலுத்தி முறையாகத் திட்டமிட்டு எந்தவித இடையூறுமின்றிப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்திடும் ஆர்வத்துடன், போட்டி நடைபெறும் பகுதியில் இரவிலும், பகலிலும் வருகை தந்து பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

பந்தயத்தையொட்டித் தீவுத் திடலைச் சுற்றியுள்ள சுவாமி சிவானந்தா சாலை, நேப்பியர் பாலம் எனப் போட்டி நடைபெற்ற சாலைப் பகுதிகள் அனைத்திலும் உயரமான மின்னொளி விளக்குகள் அமைக்கப்பட்டு இரவையும் பகலாக்கி பந்தய வீரர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது. பார்வையாளர்கள் போட்டிகளைப் பார்த்து ரசிக்க, அண்ணாசாலை, சுவாமி சிவானந்தா சாலை, தீவுத் திடல் முதலிய 8 இடங்களில் பார்வையாளர்களுக்கெனத் தனியே இருக்கைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

வாகனங்களை நிறுத்துவதற்காக, சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதான வளாகம், கலைவாணர் அரங்கம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை போட்டியைக் காண்பதற்கு வருகை தந்த மக்களுக்குச் சிரமமின்றி அமைந்திருந்தது.

தகுதிச் சுற்று, பிரதான பயிற்சியகங்கள்

ஃபார்முலா 4 கார் இந்தியன் சாம்பியன்ஷிப் பந்தயம் தனி நபராகவும், இந்தியன் ரேசிங்லீக் அணியாகவும் நடத்தப்பட்டது. ஃபார்முலா எப்4 பந்தயத்தில் சென்னை டர்போ ரைடர்ஸ், கோவா ஏசஸ் ஜேஏ ரேசிங், ஸ்டுடெமான்ஸ் டெல்லி, பெங்களூரு ஸ்பீடெஸ்டர்ஸ், ஷ்ராச்சிராஹ் பெங்கால் டைகர்ஸ், ஹைதராபாத் பிளாக்பேர்ட்ஸ், அகமதாபாத் ரேசர்ஸ், காட்ஸ்பீடு கொச்சி ஆகிய 8 அணிகள் கலந்து கொண்டன. ஓர் அணிக்கு 2 வீரர்கள் வீதம் 16 பேர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு அணியிலும் 2 கார்கள் பயன்படுத்தப்பட்டன.

இந்திய ரேசிங் லீக் பந்தயத்தில் (ஐ.ஆர்.எல்) 6 அணிகள் கலந்து கொண்டன. ஒரு அணியில் 4 பேர் இடம்பெற்றனர். இதில் ஒவ்வொரு அணியிலும் தலா ஒரு வீராங்கனை இடம் பெறுவது

கட்டாயமாக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் 18 வீரர்கள், 6 வீராங்கனைகள் என மொத்தம் 24 பேர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு அணியிலும் 2 கார்கள் வீதம் 16 கார்கள் பயன்படுத்தப்பட்டன.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பந்தயத்தின் பயிற்சியை முதல்நாள் சனிக்கிழமையன்று (31.08.2024) கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

முதல் நாளில் வீரர்கள் பயிற்சிகளில் மட்டுமே ஈடுபட்டனர். இரண்டாவது நாளான 01.09.2024 அன்று (ஞாயிற்றுக்கிழமை) தகுதிச் சுற்று, பிரதான பந்தயங்கள் அனைத்தும் திட்டமிட்டபடி வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளன.

தகுதிச் சுற்றில் முதல் இடம் பிடித்த ஆஸ்திரேலிய வீரர் ஹக்பார்ட்டரே பந்தய தூரத்தை 19:42.952 வினாடிகளில் கடந்து இலக்கை அடைந்து போட்டியில் முதல் இடம் பிடித்து வெற்றி பெற்றார்.

இந்தியாவின் ருஹான் ஆல்வா பந்தயத் தூரத்தை 19:50.251 வினாடிகளில் இலக்கை அடைந்து இரண்டாவது இடம் பிடித்து வெற்றி பெற்றார்.

மூன்றாவது இடத்தில் பெங்களூரு ஸ்பீடெஸ்டர்ஸ் அணியில் அபய் மோகன் 20:09.021 வினாடிகளில் இலக்கை அடைந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன் ஷிப் போட்டியுடன் இந்தியன் ரேசிங் லீக் போட்டியில் ஜே.கே.ஜூனியர் சாம்பியன்ஷிப் போட்டியும் நடைபெற்றது.

பிற்பகலில் தொடங்கி மின்னொளியில் இரவுவரை நடைபெற்ற இந்தப் பந்தயம் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. பார்வையாளர்கள் போட்டிகளை ரசித்து ஆரவாரம் செய்தது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. ரசிகர்கள் அதிக அளவில் குவிந்ததால் இந்த கார் பந்தயக் கொண்டாட்டத்தால் அந்தப் பகுதியே அதிர்ந்தது.

உலக நாடுகள் பங்கேற்பு

இறுதியாக வெற்றி பெற்றவர்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். அப்போது உரையாற்றுகையில், “சென்னையில் நடைபெற்று முடிந்துள்ள இந்த கார் பந்தயத்திற்குப் பொதுமக்கள் நல்ல வரவேற்பு அளித்துள்ளனர். வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ள இந்தக் கார் பந்தயப் போட்டியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து நடத்துவது குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்” என்று கூறினார்.

இந்தப் போட்டிகளில் இங்கிலாந்து, போர்சுக்கல், செக்குடியரசு, பெல்ஜியம், டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஸ்பெயின், மலேசியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்களும் வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

கார் பந்தயங்களில் உலக நாடுகளில் பலமுறை பங்கேற்று வெற்றிகள் கண்ட அனுபவங்களுடன் இந்தியாவின் முதல் ஃபார்முலா ஒன் பந்தய வீரர் திரு.நரேன் கார்த்திகேயன் ஃபார்முலா 4 கார் பந்தயம் குறித்துக் கூறும்போது,

“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில், ஆற்றல்மிக்க விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின், இந்தியன் ஃபார்முலா 4 சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் சுற்றுகளுடன் இரவு நேர வீதிப் பந்தயத்தை தொடங்கி வைத்துள்ளார். இந்த முன்முயற்சி இந்திய கார் பந்தய வீரர்களுக்குச் சர்வதேசத் தளத்தில் போட்டியிடுவதற்கு ஒரு முக்கியமான தளத்தை வழங்கும்; மேலும் வெளிநாடுகளுக்குச் செல்லாமல் அவர்களின் திறன்களைக் கூர்மைப்படுத்தவும் விலைமதிப்பற்ற அனுபவத்தைப் பெறவும் உதவுகிறது. இந்த நிகழ்வு இந்திய மோட்டார் ஸ்போர்ட்ஸை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், உயர்மட்ட பந்தயத்திற்கான மையமாகத் தமிழ்நாட்டை நிலைநிறுத்தும். தெற்காசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படும் சென்னை இந்தப் பந்தயத்தை நடத்துவது மேலும், சிறப்பாகும்”. என்று கூறி தமிழ்நாடு அரசைப் பாராட்டியுள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முழு முயற்சி செய்து மிகுந்த ஈடுபாட்டுடன் முன்னின்று நடத்திய சென்னை ஃபார்முலா 4 கார் பந்தயம் தமிழ்நாடு விளையாட்டுத்துறை வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாக இடம் பெற்றுவிட்டது.

ஃபார்முலா ஸ்டிரீட் சர்க்யூட் போட்டியைக்
கொடியசைத்துத் துவக்கிவைத்துப் பார்வையிட்டார்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை ஃபார்முலா 4 போட்டியினை நடத்தியதற்காக நன்றி தெரிவிக்கும் விழாவில் அரசு அலுவலர்களைப் பாராட்டி சான்றிதழ் வழங்கினார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 13.09.2024 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் கடந்த ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற சென்னை ஃபார்முலா 4 போட்டியினை சிறப்பாக நடத்திட உறுதுணையாய் பணியாற்றிய பெருநகரச் சென்னை மாநகராட்சி, பெருநகரச் சென்னை காவல்துறை, பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, போக்குவரத்துத் துறை, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை பெருநகர் வளர்ச்சி கழகம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழாவில் கலந்துகொண்டு அரசு அலுவலர்களைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது,

“அனைவருக்கும் காலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் பந்தயம் நடக்குமா நடக்காதா என்ற சந்தேகம் இருந்தது. இப்பந்தயம் நடந்து அதுக்கு ஒரு நன்றி அறிவிப்பு நிகழ்ச்சி நடத்துவது வித்தியாசமான ஒரு அனுபவமாக இருக்கின்றது. தெற்கு ஆசியாவிலேயே முதன் முறையாக நடைபெற்ற சென்னை Formula 4 Racing Street Circuit இரவு நேர கார் பந்தயத்தை மிகப்பெரிய மாபெரும் வெற்றி பந்தயமாக்கிய, வெற்றி நிகழ்ச்சியாக ஆக்கிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை படைத்து வருகின்ற பல்வேறு சாதனைகளில் இந்த Formula 4 கார் ரேஸ் எப்போதுமே ஒரு தனித்துவமான ஒரு இடத்தைக் கண்டிப்பாகப் பிடித்திருக்கும். இந்த மாபெரும் வெற்றியை சாத்தியமாக்கியவர்கள் நீங்க மட்டும்தான். எனவே உங்களையெல்லாம் சந்தித்து நன்றி தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன். இங்கே நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, பெருநகரச் சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகரக் காவல் துறை, சுற்றுலாத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, செய்தி மக்கள் தொடர்புத் துறை, தீயணைப்புத்துறை, சென்னைப் பெருநகர வளர்ச்சி ஆணையம், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், போக்குவரத்து துறை உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 1,000 பேரை இங்கே நான் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கின்றேன். இந்த நன்றி

தெரிவிப்பு விழாவிற்கு வருகை தந்துள்ள உங்கள் அத்தனை பேரையும் மீண்டும் வருக வருக என்று வரவேற்கின்றேன். சென்னையில் நடந்த Formula 4 ரேஸ் இன்றைக்கு உலகமே புகழ்ந்து கொண்டு இருக்கிறது, வியந்து பார்க்கின்றது. எல்லோரும் பாராட்டுகிறார்கள். வாழ்த்துகிறார்கள். அதற்கு அனைத்து முழுக் காரணமும் இங்கு வந்து இருக்க கூடிய நீங்கள் மட்டும் தான். நீங்க இல்லாமல் இந்த போட்டி நடந்து இருக்கவே நடந்து இருக்காது. அதுவும் இவ்வளவு சிறப்பா நடந்துட்டு இருக்க வாய்ப்பே கிடையாது.

மாண்புமிகு முதலமைச்சரோட உத்தரவின் பேரில் சென்ற வருடமே நடக்க வேண்டிய போட்டி, இந்த வருடம் மழைக்காலத்துக்கு முன்பு ஆகஸ்ட் மாதம் இறுதியில் நடத்தி முடிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டு இருந்தார்கள். இதற்கான தேதிகள் முடிவு செய்யப்பட்ட நாள் முதலிருந்தே நீங்கள் அனைவரும் இந்தப் போட்டியை உங்களுடைய தோளில் சுமந்து உழைக்க ஆரம்பித்தீர்கள். எந்த விதமான தயக்கமோ, களைப்போ இல்லாமல் Formula 4 பந்தயத்துக்கான பணிகளை நீங்கள் மிகச்சிறப்பாக செய்தீர்கள். சாலை போடுவது, துப்புரவுப் பணிகளை மேற்கொள்வது, போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவது, குடிநீர் வசதி ஏற்படுத்துவது, தடுப்புகள் அமைப்பது என்று உங்களுடைய பணிகளை நான் சொல்லிக்கொண்டே போகலாம்.

களப் பணியும், அர்ப்பணிப்பு உணர்வும்

இந்த போட்டியை எவ்வளவோ பாதுகாப்பா நடத்துறீங்களோ அதுதான் இந்தப் போட்டியோட உண்மையான வெற்றி, அப்படின்னு நம்மோட முதலமைச்சர் அவர்கள் மீண்டும் மீண்டும் நம்ம கிட்ட சொல்லிக் கொண்டே இருந்தார்கள். எந்த ஒரு சின்ன அசம்பாவிதமோ சிறு விபத்து கூட ஏற்பட கூடாது என்று முதலமைச்சருக்கு வாக்குறுதி கொடுத்துட்டு தான் இந்தப் போட்டியை நடத்த முடியும்னு நாங்க முடிவு செய்தோம். முதலமைச்சர் உங்களுக்குக் கொடுத்த அந்த வாக்குறுதியை 100% காப்பாத்தி இருக்கோம் என்றால் அதுக்கு இங்க வந்துருக்க உங்களுடைய களப்பணி தான் காரணம். உங்களுடைய இந்த அர்ப்பணிப்பை நானும், நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத் துறையும் என்றைக்கும் மறக்க மாட்டோம்.

நம்முடைய விளையாட்டு மேம்பாட்டுத் துறை அதிகாரிகள், அலுவலர்கள், ஊழியர்கள் இங்கு இருக்கீறீர்கள் இந்தப் போட்டியை நடத்த வேண்டும் என்று நாங்கள் யோசிக்க ஆரம்பித்த நாள் முதல் போட்டி நடைபெற்ற நாள் வரை உங்களுடைய அந்த நேர்மையான திட்டமிடல் Planning and execution மிகச் சிறப்பாக இருந்தது. அதுதான் இந்த போட்டியின் வெற்றிக்கான அடித்தளம் என்றே சொல்லலாம். நம்முடைய துறையைச் சார்ந்த அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றியும் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல் மாநகராட்சிப் பணியாளர்கள் குறிப்பாக தூய்மை பணியாளர்கள் பற்றிச் சொல்லியே ஆகணும். அதிகாலையிலும் அடிக்கிற வெயிலிலும் வந்து நின்று பணிகளைச் செய்தார்கள்.

தூய்மைப் பணியாளர்கள் மெனக்கெட்டு அந்த ரேஸ் ட்ராக் முழுவதையும் இரண்டு நாட்களுக்கு தூய்மையாக வைத்திருந்தார்கள். அதே மாதிரி காவல் துறை நண்பருடைய உழைப்பைப் பற்றி நான் இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். ஏனென்றால் இதில் பெரிய சவாலே Traffic Management தான். இந்த ரேஸ் மிக முக்கியமான பகுதியில் நடக்கின்றது. மக்கள் நடமாட்டம், வாகன நெரிசல் மிகுந்த பகுதியில் நடத்துகின்றோம். பல பேர் எதிர்பார்த்தார்கள். கண்டிப்பாகப் போக்குவரத்து நெரிசல் ஆகுமென்று. அதைப் புகைப்படம், வீடியோ எடுத்து அதைப் பெரிய செய்தி ஆக்கலாம் என்று எதிர்பார்த்தார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்தப் போட்டியை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

மிகப்பெரிய வெற்றி

சில வீடியோ ஷாட்ஸ் வந்தது. நீங்கள் கூடப் பார்த்திருப்பீர்கள். அதுல ஒரு பக்கம் ரேஸ் வந்து அழகா நடந்துட்டு இருந்தது, இன்னொரு பக்கம் ரோட்டுல அழகா போக்குவரத்துத் தடையின்றி இயங்கி கொண்டிருந்தது. அதை பார்த்தப் பிறகு விமர்சனம் செய்ய எதுவுமே இல்லை என்று பாராட்ட ஆரம்பித்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சிறிதாக விபத்து நடந்திருந்தால்கூட அதனை ஊதி பெரிதாக்க நிறைய பேர் காத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சொல்லப்போனால் இரண்டு நாய்க்குட்டி உள்ள ஓடி வந்துவிட்டது. அதனைக் கூட விமர்சனம் பண்ணினார்கள். நாய் ரேஸ் நடத்துகிறார்களா அல்லது கார் ரேஸ் நடத்துகிறார்களா என்று விமர்சித்தார்கள். இந்த F4 போட்டி நகரத்தில் நடத்துகிறோம். F1 ரேஸில் கூட நாய்க் குட்டி, முயல்

குட்டி, மான் குட்டி எல்லாம் உள்ளே வந்துவிடும். இது கூட தெரியாத அறிவாளிகள் தான் நம்மை விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். அதனை எல்லாம் தவிடுபொடியாக்கி இவ்வளவு பெரிய வெற்றியை கொடுத்து உள்ளீர்கள்.

ரேஸ் நடந்த இரண்டு நாளிலும் எந்த பிரச்சனையும் இல்லாமல் நீங்கள் நடத்தி காட்டியிருக்கீறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்த அத்தனை காவலர்களுக்கும் மீட்புப் பணிக்காக தயார் நிலையில் இருந்த தீயணைப்பு வீரர்களுக்கும் எங்களுடைய அன்பையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் அலுவலர்கள், ஊழியர்கள் எல்லா நேரமும் களத்துல நின்று பொதுமக்களுக்கு, வீரர்களுக்கு என்ன தேவையானதைப் பார்த்துப் பார்த்து நீங்கள் அனைவருக்கும் உதவி செய்தீர்கள்.

அதைப் போல் சுற்றுலா வளர்ச்சி கழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் இங்கே இருக்கீறீர்கள் நியாயமா பார்த்தால் உங்களோட பணி தான் முதலில் ஆரம்பித்தது. உங்களோட உபசரிப்பா இருக்கட்டும். உங்களுடைய பகுதியில ஸ்டாண்டு அமைக்கிறதா இருக்கட்டும். எல்லா வகையிலும் இந்தப் போட்டி சிறப்பா நடத்த நீங்க அத்தனை பேரும் எங்களுக்குத் துணை நின்று இருந்தீர்கள். அதே போல பெருநகரச் சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை ஊழியர்களுக்கும் என்னுடைய நன்றி. சர்வதேச தரத்தில் நடத்தற போட்டிக்கு எப்படி டிராக் தயார் செய்ய பட வேண்டுமோ அதே தான் நாம எதிர்பார்த்ததை விட சிறப்பா நீங்க செய்து காட்டி இருக்கீறீர்கள். அதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்

மக்கள் நல்வாழ்வுத்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்

காவல்துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்

மாநகராட்சி அலுவலர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ்

விறுவிறுப்பாக நடந்த கார்ரேஸ்

எல்லாத்தையும்விட மிக முக்கியம் எங்களுடைய செயலாளர் திரு.அதுல்யா மிஸ்ரா அவர்களுக்கும், உறுப்பினர் செயலர் திரு.மேகநாத ரெட்டி அவர்களுக்கும், அவர்கள் இரண்டு பேரும் இல்லை என்றால் எனக்கு இந்த ரேஸ் நடந்துருக்குமா ஒரு சந்தேகம்தான். கடந்த வருடம் நடத்தறோம் என்று ஒப்புக் கொண்டோம். அதற்கு பிறகு நடத்த முடியாமல் போய்விட்டது. அதுக்கு பிறகு இந்த வருடம் எப்படியேனும் நடத்திக் காட்ட வேண்டும். பல்வேறு விமர்சனங்கள். இது தேவையா, இது நடத்திக் காட்டனுமா என்று இது நடத்தாவிட்டாலும் விமர்சனம் செய்திருப்பார்கள். இருந்தாலும் நடத்தி காட்டுவோம். நம்மாலும் சென்னையில் இப்படி ஒரு இண்டர்நேஷனல் தரத்தில் ஒரு பந்தயம் நடத்த முடியும் என்று செய்து காட்டுவதற்கு முழுவதும் எனக்கு உறுதுணையாக இருந்த துறைச் செயலாளர் அவர்களுக்கும், உறுப்பினர் செயலர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை மீண்டும் மீண்டும் நான் தெரிவித்து கொள்கின்றேன். உங்களுடைய பணிகளை பார்த்த பிறகு இனி எப்படிப்பட்ட சர்வேதச விளையாட்டு போட்டிகளையும் சென்னையில் நடத்தலாம் என்கின்ற உறுதியான எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது.

இறுதியாக ஒரே ஒரு விஷயம் Formula 4 நாம் வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டோம். 10 நாள் ஆகிவட்டது. ஆனால் பணிகள் இன்னும் முடியவில்லை. எப்படி நாம் ஏற்பாடுகளைச் செய்தோமோ அதே மாதிரி சாலைகளை அந்தப் போட்டி நடந்த இடத்தை எல்லாம் பழைய நிலைமைக்கு நாம் கொண்டு வந்தாக வேண்டும். ஏற்கனவே அமைத்த தடுப்புகளை அப்புறப்படுத்துறது, சாலையை சரி செய்வது, அந்த பணிகளும் இப்போ தொடர்ச்சியா நடந்து கொண்டிருக்கிறது. உங்களை எல்லாம் பாராட்டுகின்ற அதே வேளையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் அந்த அப்புறப்படுத்துகின்ற பணிகளையும், நீங்கள் கவனமாகச் செய்து முடிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்.

மிக முக்கியமாகச் சென்னையினுடைய கார் பந்தய ரசிகர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். ஆரம்பத்தில் எத்தனை ஸ்டாண்டு போடுகிறோம் என்று சொன்ன போது கிட்டத்தட்ட 8,000 ஆயிரம் பேர் அமர்வதற்கு வசதியாக இருக்கைகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். நான் அவர்களிடம் 8000 பேர் வருவார்களா, எப்படி ticket sales பண்ண போகிறீர்கள் என்றுக் கேட்டேன். கண்டிப்பாக வருவார்கள் என்று சொன்னார்கள். நாங்கள் நினைத்ததை விட அதிகமான ticket sales நடைபெற்றது. யார் இந்த கார் ரேஸ் நடத்தக் கூடாது, எப்படியாவது நிப்பாட்டனும் அப்படின்னு நினைச்சாங்களோ அவங்க தான் இரண்டாவது நாள் எங்களுக்கு ticket கிடைக்காதா, எங்களுக்கு pass குடுங்க அப்படின்னு கேக்குற அளவுக்கு மிக சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தார்கள் என்று சொல்லலாம். 3 நாள் நடக்க வேண்டிய ரேஸ் இது, வெள்ளி, சனி, ஞாயிறு. ஆனால் முதலமைச்சர் சொல்லிவிட்டார். 3 நாட்கள் வேண்டாம் இரண்டு நாளில் நடத்தி முடியுங்கள். பொது மக்களுக்கு எந்த விதமான இடையூறும் இருக்கக்கூடாது என்று சொன்னதால் இரண்டே நாளில் நடத்தி முடித்தோம். சனிக்கிழமை அன்று கார் ரேஸ், எவ்வளவு விறுவிறுப்பாக போகுமோ அதனை விட விறுவிறுப்பாக கார் ரேஸ் நடக்குமா நடக்காதா என்ற விறுவிறுப்பு நிறைய இருந்தது. முக்கியமா பாதுகாப்புப் பணிகளுக்காகத் தான் அந்தச் சான்றிதழ்காக தான் நாங்கள் நீண்ட நேரம் காத்து இருந்தோம். அதன் பிறகு அந்தப் பாதுகாப்புச் சான்றிதழ் வந்த பிறகு சனிக்கிழமை மாலையிலிருந்து ரேஸ் ஆரம்பித்து ஞாயிறு இரவு 10.30 மணி வரை மிகச் சிறப்பாக நடந்தது.

விறுவிறுப்பாக நடந்த கார்ரேஸ்

இதற்கு முழுவதுமாக ஒத்துழைப்புக் கொடுத்த சென்னை ரேஸிங் ரசிகர்களுக்கு மற்றும் தமிழ்நாட்டிலிருக்கும் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் பலரும் ஒத்துழைப்புக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே மாதிரி விளம்பரதாரர்கள், அதே மாதிரி கார் ஓட்டிய வீரர், வீராங்கனைகள் அதனை ஒருங்கிணைத்தவர்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். சென்னை Formula 4 அப்படி என்ற வரலாற்றில் உங்களுடைய பெயர்களும் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று கூறிக் கொண்டு, உங்களுக்கு எல்லாம் மீண்டும் என்னுடைய அன்பையும் நன்றியையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். ■

கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவு நாள்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 'கப்பலோட்டியத் தமிழன்' வ.உ.சிதம்பரனார் அவர்களின் 153ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 05.09.2024 அன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்திலுள்ள வ.உ.சி, அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாள்

மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளான மகாகவி நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 11.09.2024 அன்று சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலையின்கீழ், அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

முதலாம் இராஜேந்திரன் சோழனின்
‘கங்கைகொண்ட சோழன்’ - காசு

சோழர்கள் தீபகற்ப இந்தியாவின் தனிப்பெரும் சக்தியாக கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் மற்றும் பாண்டியர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் உருவெடுத்தனர். அவர்களுடைய ஆட்சி மூன்று நூற்றாண்டுக் காலம் நீடித்திருந்தது. சோழர்களது ஆட்சியின்கீழ் தமிழகம் அரசியல், கலை மற்றும் கட்டடக்கலை, கடலாண்மை மற்றும் தொடர்புடைய பிற துறைகளிலும் உச்சநிலையினை அடைந்தது. அழகியதும் அளவில் பெரியதுமான கட்டுமானக் கோயில்கள் இக்காலகட்டத்தில் கட்டப்பட்டன. முதலாம் இராஜராஜ சோழன் கருவறை மீது நெடிதுயர்ந்த விமானத்தினைக் கட்டுவிக்கும் புதிய முறைக்கு வித்திட்டார். தான் கோயிலுக்குக் கொடையாக வழங்கிய அனைத்தையும் கல்வெட்டாக வெட்டுவித்தார். அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அவரது மைந்தன் முதலாம் இராஜேந்திர சோழன் அனைத்து வகைகளிலும் தந்தையை அடியொற்றி நடந்தார். போர்முறையிலும் கூட தந்தையைப் போலவே கடல் வழியாகவும், தரை வழியாகவும் படை நடத்திச் சென்றார்.

சோழமன்னர்கள் தங்கம், வெள்ளி, வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர். சோழர்களின் பொன் நாணயங்கள் செம்பு, வெள்ளி நாணயங்களைப் போலல்லாமல் மிகவும் அரிதானவை. சோழர்களின் காசுகளில் அமர்ந்த நிலையில் உள்ள புலியின் உருவத்தினைக் காணலாம். முதலாம் இராஜராஜனின் செப்பு நாணயங்கள் பெருமளவில் கிடைக்கின்றன. சோழர்களின் காசுகளில் மன்னனது பெயரோ பட்டப்பெயரோ பொறிக்கப்பட்டிருக்கும். சோழர்கள் காலத்திய சமுதாயப் பொருளாதார நிலையினை அறிய இக்காசுகள் உதவுகின்றன. சோழர்களின் காசியலில் முதலாம் இராஜராஜன்,

சோழர் கால நாணயங்கள்

முதலாம் இராஜேந்திர சோழனின் நாணயங்கள் முக்கியத்துவம் வாய்ந்தன.

முதலாம் இராஜேந்திரன் இலங்கையின் மீது படையெடுத்து அங்கிருந்த பாண்டியர்களின் மணிமுடியினைக் கொண்டு வந்தார். (பாண்டிய மன்னர்கள் தங்கள் மணிமுடியினை ஈழ அரசர்களிடம் பாதுகாப்பாகக் கொடுத்து வைத்திருந்தனர்). இவ்வாறாக மணிமுடிகளை கொண்டுவந்த பின்னர் முடிகொண்ட சோழன் என்ற பட்டப்பெயரினைச் சூட்டிக்கொண்டார். அதே பொறிப்புடைய பொற்காசுகளையும் வெளியிட்டார்.

இங்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள காசு கங்கைப் பகுதிகளின் மீதான முதலாம் இராஜேந்திரனின் வெற்றியினைப் பறைசாற்றுகிறது. வில், அம்பு, வெண்கொற்றக் குடையின்கீழ் அமர்ந்த புலி, இணை மீன்கள், விளக்குத் தாங்கி, 'கங்கை கொண்ட சோழன்' என்ற பொறிப்பு ஆகியவற்றை முகப்புப் பக்கத்தில் பெற்றுள்ளது. பின்பக்கமும் அவ்வண்ணமே வடிவமைக்கப்பட்டுள்ளது.

கி.பி.1012-ஆம் ஆண்டில் முதலாம் இராஜேந்திர சோழன் பட்டத்திற்குரிய 'யுவராஜனாக' அறிவிப்பு செய்யப்பட்டார். நடப்பு 2012 ஆம் ஆண்டில் இவ்வறிவிப்புச் செய்யப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைவது நினைவு கூரத்தக்கது.

- வெற்றியினைக் கொண்டாடும் இந்நாணயத்தின் தமிழகத்தின் முடியுடை மூவேந்தர்களின் சின்னத்தினை ஒருங்கே காணலாம் (வில், அம்பு-சேரர், புலி-சோழர், இணை மீன்கள் - பாண்டியர்)
- சோழர்காலச் செப்பேடுகள் பல இக்காசில் காணப்படும் சின்னத்தினை முத்திரையாகப் பெற்றுள்ளன.
- காசியியல் உலோகங்கள்' என அழைக்கப்படும் பொன், வெள்ளி, செம்பு உலோகங்களில் இக்காசினை வெளியிட்டுள்ளார்.
- இக்காசு முதலாம் இராஜேந்திரனின் மாபெரும் வெற்றியான கங்கைப் பகுதிகள் மீதான படையெடுப்பினைப் போற்றுகிறது.

நன்றி: அருங்காட்சியகங்கள் துறை...

அக்டோபர் 1: நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் பிறந்த நாள்

“தமிழர்களின் கம்பீரம்”

“முத்தமிழறிஞர் கலைஞரின் கனல் தெறிக்கும் வசனங்களை, அனல் பறக்கத் தமது சிம்மக் குரலால் பேசி, ரசிக நெஞ்சங்களில் சிம்மாசனமிட்டு அமர்ந்தவர் “நடிகர் திலகம்” அவர்கள்.

நடிப்பின் இமயமாய், தமிழர்களின் கம்பீரமான கலையுலக அடையாளமாய் என்றென்றும் உயர்ந்து நிற்கும் “நடிகர் திலகம்” சிவாஜி கணேசன் அவர்களின் புகழ், தரணியும், தமிழும் உள்ளவரை என்றென்றும் நிலைத்திருக்கும்!”

- திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

சென்னை, அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட சாதனைகள்

- அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தின் சார்பில் 2021, அக்டோபர் 1-ஆம் நாள் தமிழ்நாட்டைச் சேர்ந்த 26 ஆர்வலர்கள் மத்திய தேர்வாணைய குடிமைப்பணி உயர் பதவிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டதை நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பாராட்டிப் பாராட்டுச்சான்றிதழ், நினைவு பரிசு வழங்கினார்கள்.

- 28.03.2022 அன்று மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் மத்திய தேர்வாணையம் நடத்தும் முதல்நிலை, முதன்மை தேர்வு தொடர்பான பாட திட்டங்களின் அடிப்படையில் புவியியல் புத்தகம் தொகுதி-1 வெளியிடப்பட்டது.

- மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் 13.09.2021 அன்று சட்டப்பேரவையில் 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கை எண் 35இன்கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டு. அரசாணை (நிலை) எண்.136 மனிதவள மேலாண்மைத் (பயிற்சி -1) துறை நாள் 06.12.2021இன் படி 40 கணினிகள். 6-அச்சுப்பொறிகள். 2- மடிக்கணினிகள். 2-ஸ்கேனர்கள், 3- ஒளிப்படக் காட்டிகள் (Projector). 4 தொலைக்காட்சிப் பெட்டிகள் (LED), 4-நகல் எடுக்கும் இயந்திரங்கள் (Xerox Machines), மற்றும் 10 KVA UPS ஆகிய உபகரணங்கள் வாங்குவதற்கு தொகை ரூ.50,99,940/- (ரூபாய் ஐம்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) அரசால் வழங்கப்பட்டுக் கணினி ஆய்வகம், கணினி நூலகம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

- அரசாணை (நிலை) எண்.71 மனிதவள மேலாண்மைத் (பயிற்சி -1) துறை 4 நாள் 15.07.2022இன் படி இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் ஆர்வலர்களுக்கு உணவு வழங்குவதற்கு உணவுக்கூடப்பிரிவு கட்டுமான பணிகள், மிடுக்கு வகுப்பறைகள் (Smart Class Rooms) தொடர்பான பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.1,17,96,383/- (ரூபாய் ஒரு கோடியே பதினேழு இலட்சத்துத் தொண்ணூற்று ஆறாயிரத்து முந்நூற்று எண்பத்தி மூன்று மட்டும்) அரசால் வழங்கப்பட்டுப் பணிகள் நிறைவடைந்தன.

- அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் தலைமைச் செயலாளர் / பயிற்சி இயக்குநர் அவர்களால் 06.03.2023 அன்று 'மின்னனு' நூலகம் ஆர்வலர்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது.

- மத்திய தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 33 வெற்றியாளர்களுக்கு அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தின் சார்பில் 13.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களால் பாராட்டுச் சான்றிதழ், நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

- அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கூடுதல் உணவகம் 06.11.2023 அன்று கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறைத் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அக்டோபர் 2: அண்ணல் காந்தியடிகள் அவர்கள் பிறந்த நாள்

"தேசத் தந்தை"

"அரையாடை அணிந்து ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வென்ற போராளி! வெறுப்புணர்வுக்கு எதிராக ஒற்றை மனிதராக நின்று சமூகத்தில் அமைதி மலரப் பாடுபட்டவர்!

அவரது வாழ்வின் பொருளை உணர்த்தவே, இந்த நாட்டிற்கே 'காந்தி தேசம்' எனப் பெயரிட வேண்டும் எனத் தந்தைப் பெரியார் வலியுறுத்தினார்.

அண்ணல் என்றும் மகாத்மா என்றும் இந்த நாடும் பாரும் போற்றும் நமது தேசத் தந்தை காந்தியாரின் பிறந்தநாளில், அவர் தியாகத்தை நினைவுகூர்ந்து, அவரின் இலட்சியப் பாதையில் வெறுப்புணர்வை ஒழித்து, எல்லார்க்கும் எல்லாம் என்ற இந்தியாவைக் கட்டமைப்போம்."

– **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

சென்னை உயர்நீதிமன்றம் வளாகம், சட்ட அலுவலர்கள் கட்டிடம், 3ஆவது தளத்தில் அமைந்துள்ள அரசுத் தலைமைக் குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் பணியிடம் ஒன்று காலியாக உள்ளது. இப்பணிக்கு 8ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் அல்லாதவர்), (முன்னுரிமை அல்லாதவர்) [BC (other than BC Muslim) and (Non - Priority)] விண்ணப்பிக்கலாம்.

01. 07. 2024 - அன்றுள்ளவாறு 18 வயது முதல் 34 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். இப்பணிக்கான சம்பள விகிதம் ஊதிய நிலை – 1, ரூ.15,700/- ஆகும். இதற்கான விண்ணப்பத்தினை, "அரசுத் தலைமைக் குற்றவியல் வழக்கறிஞர் அலுவலகம், சட்ட அலுவலகர்கள் கட்டிடம் (3ஆவது தளம்), சென்னை – 600 104" என்ற முகவரிக்கு 25.10.2024 மாலை 5.45 மணிக்குள் வந்து சேருமாறு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப உறையின்மேல் "அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பம்" என்று எழுதப்பட வேண்டும்.

சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் புகைப்படம், கல்வித்தகுதிச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்களில் சுய சான்றொப்பமிட்டு (Self Attested) இணைக்கப்பட வேண்டும். விண்ணப்ப உறையினுள் முகவரியுடன் கூடிய ஒரு "Self envelope cover affixed with Rs.50/- Postal Stamp" – வைத்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முன்னாள் மேயர் சிவராஜ் அவர்கள் பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 133ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 29.09.2024 அன்று சென்னை தங்கச்சாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு முன்பாக அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்கள் பிறந்த நாள்

தமிழர் தந்தை சி. பா. ஆதித்தனார் அவர்களின் 120ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 27.09.2024 அன்று சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதைச் செலுத்தினார்கள்.

வேலைவாய்ப்பு அலுவலகமும் அதன் செயல்பாடுகளும்

பதிவு மற்றும் புதுப்பித்தல்

சென்னை மாவட்டத்தில் படித்த வேலை தேடும் இளைஞர்களின் கல்வித்தகுதிகள் இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு வேலைநாடுநர்கள் கோரும் கேட்பின் அடிப்படையில் பதிவுதாரர்களைப் பரிந்துரை செய்யும் பணியினைச் செவ்வனே வேலைவாய்ப்பு அலுவலகம் செய்து வருகிறது. தற்போது சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேலான பதிவுதாரர்கள் விவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

போட்டித்தேர்வும், வழிகாட்டுதலும்

தற்போது படித்த இளைஞர்களுக்கும், அரசுப்பணியினைக் கனவாகக் கொண்ட மனுதாரர்களுக்கும் மத்திய, மாநில அரசுப் பணிகளுக்கான கட்டணமில்லா போட்டித் தேர்வுப் பயிற்சி வகுப்புகள் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு, தொழில் நெறி வழிகாட்டும் மையங்களிலும் நடைபெற்று வருகிறது. சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செயல்படும் தன்னார்வப் பயிலும் வட்டத்தில் பயின்ற மாணவர்கள் தற்போது அரசுத்துறைகளில் பணியாற்றி வருகின்றனர்.

பல்கலைக்கழகங்கள், அதனோடு இணைந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பொருளாதாரத்தில் படிக்கும் பின்தங்கிய பிரிவினருக்கும் போட்டித்தேர்விற்கான இலவசப் பயிற்சி வகுப்புகளும் சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் வழியே நடத்தப்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவுபெற்ற மனுதாரர்களுக்கு அவர்களின் கல்வித்தகுதிக்கேற்பச் சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் வழியே 10ஆம் வகுப்புத் தவறியவர்களுக்கு 5 ஆண்டுகள் நிறைவுற்ற மனுதாரர்களுக்கு மாதம் ரூ.200/- 10ஆம் வகுப்புப் படித்து 5 ஆண்டுகள் நிறைவுற்ற மனுதாரர்களுக்கு மாதம் ரூ.300/- 12ஆம் வகுப்புப் படித்து 5 ஆண்டுகள் நிறைவுற்ற மனுதாரர்களுக்கு மாதம் ரூ.400/- பட்டம் படித்து 5 ஆண்டுகள் நிறைவுற்ற மனுதாரர்களுக்கு மாதம் ரூ.600/- உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இந்த உதவித்தொகையானது வழங்கப்பட்டு வருகிறது.

தனியார் துறை வேலைவாய்ப்பை நாடும் இளைஞர்கள்

தனியார் துறையை விரும்பும் இளைஞர்களுக்காக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரக வழிகாட்டுதலின் படி ஒவ்வொரு மாதமும் 3ஆம் வெள்ளிக்கிழமை அன்று தனியார் துறை வேலைவாய்ப்பு

முகாமானது சென்னை, கிண்டி ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் நடத்தப்பட்டு மாதந்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் தனியார் துறையில் பணிவாய்ப்பினைப் பெற்று பயன் பெற்று வருகின்றனர். பிரத்தியேகமாக வேலைநாடுநர்கள் பயன்பெறும் வகையில் www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக வேலையளிப்பவர்களும், வேலைநாடுநர்களும் பயன்பெறும் வண்ணம் இந்த இணையதளம் செயல்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பு நிலவரத்தகவல் பிரிவு

இப்பிரிவின் வாயிலாகத் தனியார் நிறுவனங்கள், மாநில அரசு, மத்திய அரசு உள்ளாட்சி துறை அரசு, பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு இணையதளத்தில் இவ்விவரங்கள் உள்ளீடு செய்யப்பட்டு வருங்காலத்தில் வேலைவாய்ப்புச் சந்தையில் ஏற்படும் பணிவாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்ளும் பணியினை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

பதிவுசெய்து காலிப்பணியிடங்களுக்கு பரிந்துரை செய்யும் பணியினை மட்டும் செய்து வந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணியானது மாறுதல் பெற்று வழிகாட்டும் பணியினை அலுவலகத்தின் உள்ளே மட்டும் இன்றிப் பல்வேறு பள்ளி மற்றும் பல்கலைகழக உறுப்புக் கல்லூரிகள், தொழில்நுட்பக் (பாலிடெக்னிக்) கல்லூரிகள் என அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் சென்று சிறப்புற செய்து வருகின்றனர்.

நன்றி : மாவட்ட வேலைவாய்ப்பு
மற்றும் தொழில் நெறி வழிகாட்டும்
மையம், சென்னை.

அக்டோபர் 30: பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்த நாள்

"பசும்பொன் திருமகனார்"

"இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடி ஆறாண்டு காலம் சிறையில் இருந்தவர் பசும்பொன் திருமகனார் அவர்கள். அவருடைய நினைவைப் போற்றுகின்ற வகையில் அவருக்கு நாங்கள் எல்லாம் வணக்கத்தை செலுத்தி இருக்கிறோம், அஞ்சலியை செலுத்தி இருக்கிறோம்.

தேவர் திருமகனார் அவர்கள் 'வீரராகப் பிறந்தார், வீரராக வாழ்ந்தார், வீரராக மறைந்தார், அவருடைய மறைவுக்குப் பிறகும் வீரராகவே இன்றைக்கும் போற்றப்படுகிறார்' – என்று பசும்பொன் தேவர் பற்றி தலைவர் கலைஞர் இப்படியெல்லாம் பேசியிருக்கிறார். எனவே, அவருடைய சார்பில், வாழ்க பசும்பொன் தேவர் பெருமகனார் புகழ்!"

– **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

நலத்திட்டங்கள்

- நிலம் வாங்கும் திட்டம்,
- நிலம் மேம்பாட்டுத் திட்டம்,
- துரித மின் இணைப்புத் திட்டம் (FTPS),
- ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குப் புதிய மின் மோட்டார் வாங்கும் திட்டம்.
- ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு பிவிசி பைப் (PVC Pipe) வாங்கும் திட்டம்,
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த பயிற்சிகள்,
- திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம்,
- தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்,
- இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்,
- இளைஞர்களுக்கான சிறப்புச் சுய வேலைவாய்ப்புத் திட்டம்,
- மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதாரக் கடனுதவித் திட்டம்,

நிலம் வாங்கும் திட்டம்

ஆதிதிராவிட மக்களின் நில உடைமையை அதிகரிக்கும் பொருட்டு, இத்திட்டம் கீழ்க்கண்ட தகுதி/நிபந்தனைகளுடன் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி

- ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மகளிர் இல்லாத குடும்பங்களில் கணவர் அல்லது மகன்களுக்கு வழங்கப்படும்.
- 18-65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும். விவசாயக் கூலி வேலை செய்பவராகவும் இருக்கலாம்.
- விண்ணப்பதாரர், அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- ஒருவர் ஒருமுறை மட்டுமே மானியம் பெற தகுதியுடையவர். ஒரு திட்டத்தின் கீழ், ஒருமுறை மானிய உதவி பெற்றால், பின்னர் அவர் தாட்கோ செயல்படுத்தும் சிறப்பு மைய உதவியுடனான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்ப் பயன்பெற தகுதியற்றவராகிறார்.

நிபந்தனைகள்

இத்திட்டத்தின்கீழ், நிலம் வாங்கும்போது கீழ்க்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

- வாங்க உத்தேசித்துள்ள நிலத்தை விண்ணப்பதாரரே தெரிவுசெய்ய வேண்டும்.
- நிலம் விற்பனை செய்பவர் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் அல்லாத பிற இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- இத்திட்டத்தின்கீழ், அதிகபட்சமாக 2.5 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்கலாம்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நிலம், வாங்க உத்தேசித்துள்ள உறுதி செய்துள்ள நிலம் உள்பட 2.5 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலத்திற்குள் இருக்கலாம்.

- நிலத்தின் சந்தை மதிப்பீட்டின்படி, சார்பதிவாளர் (பதிவுத்துறை) அலுவலக இணையதளம் வாயிலாகப் பெறப்பட வேண்டும்.
- நிலத்தின் மதிப்பு மேற்கண்ட மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்படும்.
- விண்ணப்பம் செய்த மகளிரின் பெயரில் அல்லது கணவர் அல்லது மகன்கள் பெயரில் மட்டுமே வாங்கப்படும் நிலம் பதிவு செய்யப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின்கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100 விழுக்காடு முத்திரைத்தாள், பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- வாங்கப்படும் நிலத்தினை விண்ணப்பதாரர் 10 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது. எனவே, நிலம் வாங்கியவுடன் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் சார்பதிவாளரிடம் தெரிவித்து இந்நிலம் 10 வருடங்களுக்கு விற்பனை செய்யாதவாறு வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும்.

நில மேம்பாட்டுத் திட்டம்

Land Development Scheme (LDS)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இத்திட்டத்தின் மூலம் நிலவளத்தை மேம்படுத்துதல், ஆழ்குழாய்க் கிணறு / திறந்தவெளிக்கிணறு,பம்ப்செட் அமைத்தல்மற்றும் குழாய் அமைத்தல் போன்றவற்றிற்காக மானியம் வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர், அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நில உடைமை நஞ்சை 2.5 ஏக்கர் அல்லது புஞ்சை 5 ஏக்கருக்குள் இருக்க வண்டும்.
- 18-65 வயதிற்குள் இருக்கவேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்கவேண்டும்.
- திருமணமாகாத விண்ணப்பதாரராக இருப்பின் விண்ணப்பதாரரோ அல்லது அவர் குடும்பத்தினரோ தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக்கூடாது.
- திருமணமான விண்ணப்பதாரராக இருப்பின் அவரது குடும்பம் தனிக் குடும்பமாகக் கருதப்படும். இந்நிலையில் விண்ணப்பதாரர் அல்லது அவரது குடும்பத்தினர் தாட்கோவின் திட்டங்களில் மானியம் பெற்றிருக்கக் கூடாது.

நிபந்தனைகள்

- நிலம் மேம்பாடு செய்வதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் இருக்கவேண்டும்.
- மூன்று ஆண்டுகளுக்கான அடங்கல், 10 ஆண்டுகளுக்கான வில்லங்கச் சான்று பெறவேண்டும்.
- நிலத்திற்கான பட்டா மற்றும் சிட்டா வைத்திருக்க வேண்டும்.
- நிலத்தின் புலப்பட நகல் (FMB Sketch), 'அ' பதிவேடு ('A' Register) நகல் வைத்திருக்க வேண்டும்.
- திட்ட அறிக்கை வைத்திருக்க வேண்டும் (மண் வளத்தன்மையை மேம்படுத்துவதற்கு நீர் ஆதாரம் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்)
- நிலம் மேம்பாடு செய்வதற்கு அந்தந்த மாவட்டங்களில் நபார்டு வழிகாட்டுதலின்படி நிலவளம் மேம்படுத்துதல், பம்ப் செட் அமைத்தல், நீர்ப்பாசன குழாய் அமைத்தல், ஆழ்துளை கிணறு, திறந்தவெளிக் கிணறு அமைத்தல் ஆகியவற்றிற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
- விண்ணப்பதாரரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் (Geologist / Hydrologist) சான்று பெறப்படவேண்டும். அனைத்து இனங்களிலும் நபார்டு வழிகாட்டுதல் முறை பின்பற்றப்பட வேண்டும்.

துரித மின் இணைப்புத் திட்டம் (FTPS)

ஆதிதிராவிடர், பழங்குடியினத்தைச் சார்ந்த தகுதியுடைய விண்ணப்பதாரர் ஒருவருக்கு இலவசமின் இணைப்புப் பெற வைப்புத்தொகை செலுத்த வேண்டும். குதிரைத் திறனுக்கு ஏற்ப 5 HP-க்கு ரூ.2.50 இலட்சம், 7.5 HP-க்கு ரூ.2.75 இலட்சம், 10 HP-க்கு ரூ.3 இலட்சம், 15 HP-க்கு ரூ.4 இலட்சம் என TANGEDCO நிர்ணயித்துள்ளது. இதில் 90 விழுக்காடு நிதியினை மானியமாக விவசாயிகள் சார்பாகத் தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகத்திடம் நேரடியாக அரசு செலுத்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குத் துரித மின் இணைப்பு பெற்றுத் தந்திட முதுநிலை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயியாக இருக்க வேண்டும்.
- வயது வரம்பு ஏதுமில்லை.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும்.

நிபந்தனைகள்

- நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும்.
- மேற்கண்ட நிலத்தில் திறந்தவெளிக் கிணறு அல்லது ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்திருக்க வேண்டும்.

மானியம் விடுவிக்கும் முறை

மாவட்ட மேலாளர் அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அனைத்தும் உள்ளனவா என மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சரிபார்க்கப்பட்டு (Scrutiny of Application) விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீது மாவட்ட மேலாளர் அல்லது உதவி மேலாளரால் தள ஆய்வு மேற்கொள்ளப்படும். தள ஆய்வு முடிந்த பின்னர் இலவச மின் இணைப்புப் பெறவேண்டி தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் மாவட்ட மேலாளர்களால், மேலாண்மை இயக்குநர் அவர்களுக்குப் பரிந்துரை செய்யப்படும். இவ்வாறு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட பட்டியல் தொகுக்கப்பட்டுக் (Consolidate) குதிரைத் திறனுக்கு ஏற்ப தற்போது 5 HP-க்கு ரூ.2.50 இலட்சம். 7.5 HP-க்கு ரூ.2.75 இலட்சம் 10 HP-க்கு ரூ.3 இலட்சம், 15 HP-க்கு ரூ.4 இலட்சமாக TANGEDCO நிர்ணயித்துள்ளது. மாவட்ட மேலாளரால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் மேற்கண்ட குதிரைத் திறனுக்கேற்ப நிர்ணயம் செய்யப்பட்ட தொகையில் 90 விழுக்காடு மானியமாகவும் 10 விழுக்காடு பயனாளி பங்குத் தொகையாகவும் பெற்று விண்ணப்பதாரர் பட்டியலுடன் சென்னையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) தலைமையகத்திற்கு தாட்கோ மூலம் அனுப்பி வைத்து இலவச மின் இணைப்பு பெற ஏற்பாடு செய்யப்படும்.

நீர் பாசனத்திற்கான புதிய மின் மோட்டார் வாங்கும் திட்டம்

ஆதிதிராவிடர், பழங்குடியின விவாசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக,

ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்த வெளிக்கிணறுகள் மூலம் நீர் பாசனத்திற்கு பயன்படுத்தப்படும் புதிய மின் மோட்டார் வாங்குவதற்கு மின் மோட்டார் விலையில் 50 விழுக்காடு அல்லது அதிக பட்சமாக ரூ.10,000/- மானியம் பெற இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தகுதிகள்

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர், அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் நிலம் இருக்க வேண்டும்.
- விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும்.

- தாட்கோ மானியத் திட்டத்தில் பயன்பெறாத ஆதிதிராவிட விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- குறு, சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

நிபந்தனைகள்

- வேளாண் / தோட்டக்கலை ஆகிய திட்ட வழிகாட்டுதலை மையமாகக் கொண்டு திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.
- வேளாண் துறையின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து ISI தரச்சான்று பெற்ற மின் மோட்டார் கொள்முதல் செய்ய வேண்டும்.
- வேளாண் / தோட்டக்கலைத் துறையின் திட்டங்களில் மின் மோட்டார் மானியம் பெற்றால் இத்திட்டத்தில் மானியம் பெற வழிவகை இல்லை.

ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு பிவிசி குழாய்கள் (PVC Pipe) வாங்கும் திட்டம்

ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக, ஆழ்துளை கிணறு, திறந்தவெளி கிணறுகள் மூலம் நீர் பாசனத்திற்கு பயன்படுத்தப்படும் பிவிசி குழாய்கள் (PVC Pipe) வாங்குவதற்கு 50 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சம் ரூ.15,000/- பெற இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தகுதிகள்

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர், அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் நிலம் இருக்க வேண்டும்.
- விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும்.
- தாட்கோ மானிய திட்டத்தில் பயன்பெறாத ஆதிதிராவிட விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

நிபந்தனைகள்

- வேளாண் துறையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து ISI தரச்சான்று பெற்ற பிவிசி குழாய்கள் கொள்முதல் செய்ய வேண்டும்.
- வேளாண் / தோட்டக்கலைத் துறையில் பிவிசி குழாய்கள் வாங்க மானியம் பெற்றவர்கள். இத்திட்டத்தில் பயன்பெற இயலாது. எனினும் ஏற்கெனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியத் திட்டத்தில் மின் மோட்டார் / டீசல் பம்ப் மானியம் பெற்றவர்கள் இத்திட்டத்தில் பயன்பெறலாம்.
- விண்ணப்பிக்கும் விவசாயி அவர்தம் நிலத்தில் 1.00 ஏக்கர் அளவு வரையுள்ள நிலப்பரப்பிற்காக அமைக்கப்படும் பிவிசி குழாய் நிர்மாணிப்புக்கு மட்டும் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.15,000/- வரை மானியம் வழங்கப்படும்.
- மாவட்ட மேலாளர்கள் அவர்களது மாவட்டத்தில் இணை இயக்குநர், வேளாண்மைத் துறை அவர்களை ஆலோசித்து மாவட்ட இலக்கினை வட்ட அளவில் இலக்கு நிர்ணயித்துக்கொள்ள அனுமதி வழங்க கோரப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண் காடுகள், (Agro Forestry), நர்சரி செடிகள் வளர்ப்பு மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள்

தகுதிகள்

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர், பழங்குடியின இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர், அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் நிலம் இருக்க வேண்டும்.

- விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும்.
- குறு, சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 18 முதல் 45 வயது வரை இருக்க வேண்டும்.

திறன் மேம்பாட்டுப் பயிற்சி

Skill Development Training

ஆதிதிராவிட, பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த ஆரம்ப நிலை பயிற்சிகளான கட்டுமானத் தொழில் சார்ந்த பயிற்சிகள், மைய அரசு நிறுவனங்கள் மூலம் ஆயத்த ஆடை தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி, தோல் பொருட்கள் தயாரித்தல். கணினிப் பயிற்சிகள், தகவல் தொழில் நுட்பம், அவை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும்.

திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் தாட்கோ இணையதளம் http://training.tahdco.com என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்துள்ள இளைஞர்களுக்குத் தகுந்த நிறுவனங்கள் மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

தகுதி

- ஆதிதிராவிட, பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
- வயது வரம்பு 18 முதல் 45 வரை உடையவராக இருக்கலாம்.
- குடும்ப ஆண்டு வருமானமும் ரூ.3 இலட்சம் வரை இருக்கலாம்.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

Entrepreneur Development Scheme (EDP)

ஆதிதிராவிட, பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் சுயமாகத் தொழில் செய்திட தொடர் வருவாய் ஈட்டக்கூடிய அனைத்துத் தொழில்களுக்கும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தகுதி

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்ற திட்டங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
- தாட்கோ பயிற்சித் திட்டத்தின்கீழ்ப் பயன் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- 18-65 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- கடன் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- திருமணமாகாத விண்ணப்பதாரராக இருப்பின் விண்ணப்பதாரரோ அல்லது அவர் குடும்பத்தினரோ தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- திருமணமான விண்ணப்பதாரராக இருப்பின் இவரது குடும்பம் தனிக்குடும்பம் எனக் கருதப்படும். இந்நிலையில் விண்ணப்பதாரரோ அல்லது அவர் குடும்பத்தினரோ தாட்கோவின் திட்டங்களில் மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

மானிய விபரம்

- ஆதிதிராவிடர் தொழில்முனைவோர்களுக்குத் திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியம் விடுவிக்கப்படும்.

- ஆதிதிராவிட சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதார நிதியுதவித் திட்டத்தின்கீழ்த் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.50 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படும்.
- பழங்குடியினர்களில் தனி நபர்களுக்கு இலகு ரக வாகனங்களுக்கு அதிக பட்சம் மானியமாக 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.4 இலட்சமும், கனரக வாகனங்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.5.50 இலட்சமும், இதரத் தொழில்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சமும் மானியமாக வழங்கப்படும். மேலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சமும் மானியமாக வழங்கப்படும்.

இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம்

Self Employment Programme for Youth (SEPY)

ஆதிதிராவிட, பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் சுயமாக தொழில் செய்திட தொடர் வருவாய் ஈட்டக்கூடிய அனைத்துத் தொழில்களுக்கும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தகுதி

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட, பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- 18-45 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- கடன், மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர், அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- ஒன்றிய அல்லது மாநில அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களின் தகுதிச் சான்று பெற்றிருக்க வேண்டும்.

நிபந்தனைகள்

- துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்துகொள்ள வேண்டும்.
- இத்திட்டத்தின்கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காகக் கடன், மானியம் பெறப்பட்ட மாவட்டத்தில் தொழில் புரிய வேண்டும்.

மானிய விபரம்

- ஆதிதிராவிடர் தொழில்முனைவோர்களுக்குத் திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியம் விடுவிக்கப்படும்.
- ஆதிதிராவிட சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நிதியுதவித் திட்டத்தின்கீழ்த் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.50 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படும்
- பழங்குடியினர்களில் தனி நபர்களுக்கு இலகு வாகனங்களுக்கு அதிக பட்சம் மானியமாக 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.4 இலட்சமும், கனரக வாகனங்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.5.50 இலட்சமும், இதர தொழில்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சமும் மானியமாக வழங்கப்படும். மேலும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சமும் மானியமாக வழங்கப்படும்.

நன்றி: தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

குறிப்பு: இதன் தொடர்ச்சி அடுத்தமாத இதழில் வெளிவரும்...

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(TNPSC) குரூப் – I, II, IV

10ஆம் வகுப்பு அறிவியல் மற்றும் திறனறி பயிற்சி வினா விடைத்தாள் - 30.12.2023

1. பின்வருவனவற்றில் சரியான கூற்று எது/ எவை?

   1. அணுக்கரு உலையில் தணிப்பான்கள் இல்லை எனில் அது அணுகுண்டாகச் செயல்படும்.
   2. அணுக்கருப் பிளவின்போது, ஒரு பிளவில் சராசரியாக இரண்டு அல்லது மூன்று நியூட்ரான்கள் உற்பத்தியாகும்.
   3. ஐன்ஸ்டீன் நிறை ஆற்றல் சமன்பாடு அணுக்கருப் பிளவு மற்றும் அணுக்கரு இணைவு ஆகியவற்றில் பயன்படுகிறது.

   A. 1, 2 மட்டும் B. 2, 3 மட்டும்
   C. 1, 3 மட்டும் <u>D. மேற்கண்ட அனைத்தும்</u>

   Which among the following statement is/are correct?

   1. If a moderator is not present, then a nuclear reactor will behave as an atom bomb
   2. During one nuclear fission on an average, 2 to 3 neutrons are produced
   3. Einstein's theory of mass energy equvalence is used in nuclear fission and fusion

   A. 1, 2 only B. 2, 3 only C. 1, 3 only <u>D. All the above</u>

2. இனச்செல் (கேமீட்டுகள்) பற்றிய சரியானகூற்று எது?

   A. இருமயம் கொண்டவை
   B. பாலுறுப்புகளை உருவாக்குபவை
   <u>C. ஹார்மோன்களை உற்பத்தி செய்கின்றன</u>
   D. இவை பாலுறுப்புகளிலிருந்து உருவாகின்றன

   What is true of gametes?

   A. They are diploid B. They give rise, to gonads
   <u>C. They produce hormones</u> D. They are formed from gonads

3. நீர்க்குழாய்த் திறத்தல் மற்றும் மூடுதல், திருகின் சுழற்சி, பம்பரத்தின் சுழற்சி முதலானவை எதற்கான எடுத்துக்காட்டுகள்?

   A. விசை <u>B. இரட்டைகளின் திருப்புத்திறன்</u>
   C. கணத்தாக்கு D. நிலைமம்

   Turning the tab, winding/unwinding a screw, spinning a top, etc., is an example of

   A. Force <u>B. Moment of couple</u> C. Impulse D. Inertia

4. பின்வரும் கூற்றுக்களைக் கவனிக்க

   1. துகள் அமைப்பில் ஏற்படும் நேர்க்கோட்டு உந்தம் எப்போதும் மாறிலியாகும்.
   2. பொருளொன்றின் தோற்ற எடை எப்போதும் அதன் உண்மையான எடைக்கு சமமாக இருக்கும்.

3. பொருட்களின் எடை நிலநடுக்கோட்டுப் பகுதியில் பெருமமாகவும். துருவப் பகுதியில் குறைவாகவும் இருக்கும்.

4. திருகுமறை (Screw) ஒன்றினைக் குறைந்த கைப்பிடி உள்ள திருகுக்குறடு (spanner) வைத்து திருகுதல், நீளமான கைப்பிடி கொண்ட திருகுக்குறடினை வைத்துத் திருகுதலைவிட எளிதானதாகும்.

A. அனைத்தும் தவறானவை B. <u>1, 3, 4 மட்டுமே தவறானது</u>

C. 2, 4 தவறானது D. 1, 2, 3 மட்டும் தவறானது

Consider the following statement

1. The linear momentum of a system of particles is always conserved
2. Apparent weight of a person is always equal to the actual weight
3. Weight of a body is greater at the equator and less at the Polar region
4. Turning a nut with a spanner having a short handle is so easy than one with a long handle.

A. All the statements are incorrect B. <u>1, 3, 4 are incorrect</u>

C. 2, 4 only incorrect D. 1, 2, 3 are incorrect

5. நிறைமதிப்பு மாறாமல் புவியானது தனது ஆரத்தில் 50% சுருங்கினால் புவியில் பொருட்களின் எடையானது?

A. 50% குறைப்பு B. 50% அதிகரிப்பு C. 250% குறைப்பு D. <u>300% அதிகரிக்கும்</u>

If the earth shrinks to 50% of its real radius its mass remaining same, the weight of a body on the earth will

A. Decrease by 50% B. Increase by 50% C. Decrease by 250% D. <u>Increase by 300%</u>

6. ஒரு லென்சின் திறன் 4D எனில் அதன் குவியத் தொலைவு

A. 4m B. –40m C. <u>–0.25m</u> D. –2.5m

Power of a length is -4D, then its focal length is

A. 4m B. –40m C. <u>–0.25m</u> D. –2.5m

7. பின்வருவனவற்றைப் பொருத்துக

1. ரெட்டினா – a. கண்ணில் ஒளிக்கதிர் செல்லும் பாதை
2. கண்பாவை – b. சேய்மைப் புள்ளி விழியை நோக்கி நகர்தல்
3. சிலியரித்தசைகள் – c. அண்மைப்புள்ளி விழியை விட்டு விலகிச் செல்லுதல்
4. கிட்டப்பார்வை – d. விழித்திரை
5. தூரப்பார்வை – e. விழி ஏற்பமைவுத் திறன்

A. <u>d a e b c</u> B. b e c d a C. e b c d a D. e a d b c

Match the following

1. Retina – a. Path way of light
2. Pupil – b. Far point comes closer
3. Ciliary muscle – c. Near point moves away
4. Myopia – d. Screen of the eye

5. Hypermetropia – e. Power of accommodation

A. d a e b c B. b e c d a C. e b c d a D. e a d b c

8. கூற்று (A) : வெள்ளொளியானது ஒளிபுகும் ஊடகத்தில் செல்லும்போது வெவ்வேறு நிறங்கள் ஏற்பட்டு நிறமாலை உண்டாகிறது.

காரணம் (R) : வெள்ளொளியானது ஒளிபுகும் ஊடகத்தில் செல்லும்போது வெவ்வேறு நிறங்கள் வெவ்வேறு கோண அளவுகளில் விலகல் அடைகிறது.

A. இரண்டும் உண்மை மற்றும் காரணம் கூற்றின் சரியான விளக்கம்

B. இரண்டும் உண்மைதான் ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

C. கூற்று உண்மை ஆனால் காரணம் தவறானது

D. கூற்றுத் தவறானது ஆனால் காரணம் உண்மை

Assertion : we get the spectrum when while light is refracted by the transparent medium.
Reason : different coloured lights are bent through different angles.

A. Both are true and reason is the correct explanation of assertion

B. Both are true but reason is not the correct explanation of assertion

C. Assertion is true but reason is false

D. Assertion is false but reason is true

9. பொது வாயு மாறிலியின் மதிப்பு

A. 3.81 J mol^{-1} K^{-1} B. 8.03 J mol K^{-1} C. 1.38 J mol^{-1} K^{-1} D. 8.31 J mol^{-1} K^{-1}

The value of universal gas constant

A. 3.81 J mol^{-1} K^{-1} B. 8.03 J mol K^{-1} C. 1.38 J mol^{-1} K^{-1} D. 8.31 J mol^{-1} K^{-1}

10. ஒரு திடப்பொருளை வெப்பப்படுத்துதலின் விளைவாக அப்பொருளின் பரப்பு அதிகரிப்பதால் ஏற்படும் விரிவு

A. பரும வெப்பவிரிவு B. உண்மை வெப்பவிரிவு

C. தோற்ற வெப்பவிரிவு D. பரப்பு வெப்பவிரிவு

If there is an increase in the area of a solid object due to heating, then the expansion is called.

A. Volumetric expansion B. Real expansion

C. Apparent expansion D. Superficial expansion

11. மீ.பொ.ம காண்க. $8x^4 y^2, 48 x^2, y^4$

A. $x^4 y^4$ B. $8x^4 y^4$ C. $2xy$ D. $48x^4 y^4$

Find the LCM. $8x^4 y^2, 48 x^2, y^4$

A. $x^4 y^4$ B. $8x^4 y^4$ C. $2xy$ D. $48x^4 y^4$

12. $((x^2-16)/(x+4))/((x-4)/(x+4))$

A. 0 B. x+4 C. 1 D. x-4

13. $x=(a^2+3a-4)/(3a^2-3))$ மற்றும் $y=((a^2+2a-8)/(2a^2a-4))$ எனில் $x^2 y-2$ =?

A. 9/4 B. 4/9 C. 2/3 D. 3/2

If $x=((a^2=3a\text{-}4)/(3a^2\text{-}3))$ and $y=((a^2=2a\text{-}8)/(2a^2\ a\text{-}4))$ then $x^2\ y^{-2}=?$

A. 9/4 B. <u>4/9</u> C. 2/3 D. 3/2

14. நீளம் 3மீ ஆரம் 2.8மீ உடைய ஒரு சமப்படுத்தும் உருளையைக் கொண்டு ஒரு தோட்டம் சமப்படுத்தப்படுகிறது. 8 சுற்றுக்களில் எவ்வளவு பரப்பை உருளைச் சமன் செய்யும்?

A. $105.6m^{-2}$ B. $633.6m^{-2}$ C. <u>$422.4m^{-2}$</u> D. $211.2\ m^{-2}$

A garden roller whose length is 3m long and whose radius is 2.8m is rolled to level a garden. How much area will it cover in 8 revolutions?

A. $105.6m^{-2}$ B. $633.6m^{-2}$ C. <u>$422.4m^{-2}$</u> D. $211.2\ m^{-2}$

15. 16 செ.மீ ஆரமுள்ள ஓர் உலோகப்பந்து, உருக்கப்பட்டு 2 செ.மீ ஆரமுள்ள சிறு பந்துகளாக்கப்பட்டால், எத்தனை பந்துகள் கிடைக்கும்?

A. <u>512</u> B. 4096 C. 1365 D. 472

A metallic sphere of radius 16cm is melted and recast into small spheres each of radius 2cm. How many small spheres can be obtained?

A. <u>512</u> B. 4096 C. 1365 D. 472

16. கொடுக்கப்பட்ட தரவின் வீச்சு காண்க.
25, 67, 48, 53, 18, 39, 49

A. 48 B. <u>49</u> C. 67 D. 25

Find the range of the given data
25, 67, 48, 53, 18, 39, 49

A. 48 B. <u>49</u> C. 67 D. 25

17. கலா மற்றும் வாணி இருவரும் நண்பர்கள் "இன்று எனது பிறந்தநாள்" எனக் கலா கூறினாள். வாணியிடம், "உனது பிறந்தநாளை எப்போது கொண்டாடினாய்?" எனக் கேட்டாள். அதற்கு வாணி "இன்று திங்கள் கிழமை, 75 நாள்களுக்கு முன் என்னுடைய பிறந்தநாளைக் கொண்டாடினேன்" என்றாள். எனில், என்ன கிழமையில் வாணியின் பிறந்தநாள் வந்திருக்கும்?

A. <u>புதன்</u> B. வியாழன் C. செவ்வாய் D. வெள்ளி

Kala and Vani are friends. Kala says, today is my birthday. When will you celebrate your birthday?" Vani replies, "today is Monday and I celebrated my birthday 75 days ago". Find the day when Vani celebrated her birthday

A. <u>Wednesday</u> B. Thursday C. Tuesday D. Friday

18. பொருத்தமில்லாததைக் கண்டறி.
$\sqrt{36}, \sqrt{1.44}, \sqrt{120}, 5\sqrt{32}, \sqrt{50/98}$

A. $\sqrt{50/98}$ B. $5\sqrt{32}$ C. <u>$\sqrt{120}$</u> D. $\sqrt{1.44}$

Find the odd one.
$\sqrt{36}, \sqrt{1.44}, \sqrt{120}, 5\sqrt{32}, \sqrt{50/98}$

A. $\sqrt{50/98}$ B. $5\sqrt{32}$ C. <u>$\sqrt{120}$</u> D. $\sqrt{1.44}$

19. தவறானது எது?

A. $3\sqrt{108} = 3\ 3\sqrt{4}$ B. $4\sqrt{3} = 12\sqrt{27}$ C. $3\sqrt{7} > 4\sqrt{5}$ D. <u>$2\sqrt{2} > 4\sqrt{3} > 2\sqrt{4}$</u>

Which is incorrect?

A. $3\sqrt{108} = 3\,3\sqrt{4}$ B. $4\sqrt{3} = 12\sqrt{27}$ C. $3\sqrt{7} > 4\sqrt{5}$ D. $2\sqrt{2} > 4\sqrt{3} > 2\sqrt{4}$

20. $(300000)^3 * (2000)^4 =$

A. $43.2 * 10^{29}$ B. $432 * 10^{29}$ C. $4.32 * 10^{27}$ D. $4.32 * 10^{29}$

21. ஒரு லென்சின் திறன் 4D எனில் அதன் குவியத்தொலைவு

A. 4m B. –40m C. –0.25m D. –2.5m

Power of a length is -4D then its focal length is

A. 4m B. –40m C. –0.25m D. –2.5m

22. பின்வருவனவற்றைப் பொருத்துக

1. ஒத்த ஈரணு மூலக்கூறு – a. ஓசோன்
2. வேற்று ஈரணு மூலக்கூறு – b. ஹைட்ரஜன் அயோடைடு
3. ஒத்த மூவணு மூலக்கூறு – c. தண்ணீர்
4. வேற்று மூவணு மூலக்கூறு – d. ஃப்ளோரின்

A. abcd B. bacd C. dbac D. dbca

Match the following

1. Hormodiatomic – a. ozone
2. Heterodiatomic – b. hydrogen iodide
3. Homotriatomic – c. water
4. Heterotriatomic – d. fluorine

A. abcd B. bacd C. dbac D. dbca

23. துருவின் வேதியியல் சமன்பாடு

A. $FeO.H_2O$ B. $FeO_4.H_2O$ C. $Fe_2O_3.H_2O$ D. FeO

Chemical formula of rust is

A. $FeO.H_2O$ B. $FeO_4.H_2O$ C. $Fe_2O_3.H_2O$ D. FeO

24. பின்வருவனவற்றைப் பொருத்துக

1. சுண்ணாம்பு – a. திருவண்ணாமலை
2. ஜிப்சம் – b. மதுரை
3. டைட்டானியம் – c. திருநெல்வேலி
4. மேக்னடைட் – d. கடலூர்
5. டங்ஸ்டன் – e. கோயம்புத்தூர்

A. decab B. ceabd C. cebad D. acebd

Match the following

1. Limestone – a. Tiruvannamalali
2. Gypsum – b. Madurai
3. Titanium – c. Tirunelveli

4. Magnetite – d. Cuddalore

5. Tungsten – e. Coimbatore

A. decab B. ceabd C. cebad D. acebd

25. குறிப்பிட்ட வெப்பநிலையில் அழுத்தத்தை அதிகரிக்கும்போது நீர்மத்தில் வாயுவின் கரைதிறன்

A. மாற்றம் இல்லை B. அதிகரிக்கிறது

C. குறைகிறது D. வினை இல்லை

When pressure is increased at constant temperature

A. No change B. Increases

C. Decreases D. No reaction

26. இரசக்கலவை என்பது -------- ஐ கரைப்பொருளாகவும் ------ கரைப்பானாகவும் கொண்டிருக்கும் திண்மக் கரைசலுக்கு ஒரு எடுத்துக்காட்டு

A. திண்மம், திரவம் B. திரவம், திண்மம் C. திண்மம், வாயு D. திரவம், வாயு

Amalgam is an example of solid solution containing -------- as solute ------ as solvent

A. Solid, liquid B. Liquid, solid C. Solid, gas D. Liquid, gas

27. ஹைடிரஜன்(H^+) அயனி நீரில் கரைவதால் உருவாகும் அயனி என்னவென்று அழைக்கப்படுகிறது?

A. ஆக்ஸைடுஅயனி B. ஹைட்ரோனியம் அயனி

C. சல்பேட்அயனி D. நைட்ரேட்அயனி

The ion formed by dissolution of H^+ in water is called

A. Oxide ion B. Hydronium ion C. Sulphate ion D. Nitrate ion

28. பனிக்கட்டி உருகுதல் செயலில் நிகழும் சமநிலை -------- என்று அழைக்கப்படுகிறது.

A. இரசாயன சமநிலை B. இயற்பியல் சமநிலை

C. வெப்ப சமநிலை D. எதுவுமில்லை

The equilibrium attained during the melting of ice is known as

A. Chemical equilibrium B. Physical equilibrium

C. Thermal equilibrium D. None

29. TFM என்பது சோப்பின் எந்தப் பகுதிப் பொருளைக் குறிக்கிறது?

A. தாதுஉப்பு B. வைட்டமின் C. கொழுப்பு அமிலம் D. கார்போஹைட்ரேட்

TFM in soaps represents_content in soap

A. Mineral B. Vitamin C. Fatty acid D. Carbohydrates

30. CH_3COCH_3 எந்தவகைச் சேர்மத்தைச் சார்ந்தது?

A. கீட்டோன்கள் B. ஆல்டிஹைட்ஸ் C. ஆல்கஹால் D. கார்பாசிலிக் அமிலம்

The compound CH_3COCH_3 belongs to which class of the compound?

A. Ketons B. Aldehydes C. Alcohol D. Carboxylic acid

31. உள்நோக்கிய சைலம் என்பது எதன் சிறப்பம்சமாகும்

A. வேர் B. தண்டு C. மலர்கள் D. இலைகள்

The endarch condition is the characteristic feature of

A. Root B. Stem C. Flower D. Leaves

32. கார்டெக்ஸ் எதன் இடையில் உள்ளது?

A. புறத்தோல் மற்றும் மெரிஸ்டெமாடிக் திசு B. தள மற்றும் புறத்தோல் திசு

C. புறத்தோல் மற்றும் அகத்தோல் D. தள மற்றும் வாஸ்குலர் திசு

Cortex lies between

A. Epidermal and Meristematic tissue B. Ground and Epidermal tissue

C. Epidermis and Endodermis D. Ground and Vascular tissue

33. பின்வருவனவற்றுள் இரத்தத்தின் இயைபு தொடர்பாகச் சரியானது எது?

A. பிளாஸ்மா - இரத்தம் + லிம்ஃபோசைட்

B. சீரம் - இரத்தம் + ஃபைப்ரினோஜென்

C. நிணநீர் - பிளாஸ்மா + RBC + WBC

D. இரத்தம் - பிளாஸ்மா + RBC WBC + பிளேட்லெட்டுகள்

Which one of the following regarding blood composition is correct?

A. Plasma - blood + lymphocyte B. Serum - blood + fibrinogen

C. Lymph - plasma + RBC +WBC D. Blood - plasma + RBC + WBC + platelets

34. த்ரோம்போசைட்டுகள் பற்றிய பின்வரும் அறிக்கையைக் கவனியுங்கள்

1. இவை அளவில் சிறியவை மற்றும் நிறமற்றவை
2. இவற்றில் உட்கரு இல்லை
3. இவற்றின் வாழ்நாள் 8-10 நாட்கள்
4. காயங்கள் ஏற்படும் பொழுது இரத்த உறைதலை ஏற்படுத்தி இரத்தப்போக்கைத் தடுக்கின்றன

A. 1, 2, 4 சரி B. 1, 4 சரி C. 1, 3, 4 சரி D. அனைத்தும் சரி

Consider the following statement about Thrombocytes

1. They are small and colourless
2. They do not have nucleus
3. Their life span is 8-10 days
4. They form clot at the site of injury and prevent blood lose

A. 1, 2, 4 are correct B. 1, 4 are correct

C. 1, 3, 4 are correct D. All are correct

35. கூற்று (A) : மைய நரம்பு மண்டலம் முழுமையும் மூளைத்தண்டுவடத் திரவத்தால் நிரம்பியுள்ளது.
காரணம் (R) : மூளைத்தண்டுவடத் திரவத்திற்கு இத்தகைய பணிகள் கிடையாது.

A. இரண்டும் சரியானது, R என்பதை A விளக்குகிறது

B. A சரியானது, R தவறு

C. A தவறு, R சரியானது

D. இரண்டும் சரி, R, Aஐ விளக்கவில்லை

Assertion: Cerebrospinal fluid is present throughout the central nervous system.
Reason: Cerebrospinal fluid has no such functions.

A. Both are correct, A explains R

B. A is correct, R is incorrect

C. A is incorrect, R is correct

D. Both are correct, R does not explain A

36. நியூரானில் எந்த நுண்ணறுப்பு மட்டும் காணப்படுவதில்லை?

A. சென்ட்ரியோல்கள் | B. ரைபோசோம்கள்

C. லைசோசோம்கள் | D. நியூக்ளியோலஸ்

A neuron contains all cell organelles except

A. Centrioles | B. Ribosomes

C. Lysosomes | D. Nucleolus

37. பின்வருவனவற்றில் எது சரியாகப் பொருந்துகிறது?

A. உயிர்காக்கும் ஹார்மோன் – மெலடோனின்

B. காலத் தூதுவர்கள் – கார்டிசோல்

C. இறுக்கநிலை ஹார்மோன் – அப்சிசிக் அமிலம்

D. இவை அனைத்தும்

Which among the following is correctly matched?

A. Life saving hormone – Melatonin | B. Time messanger – cortisol

C. Stress hormone – Abscisic acid | D. All of these

38. மனித இன்சுலினை முதன் முதலில் கண்டுபிடித்தவர்

A. ஃப்ரெட்ரிக் பேண்டிங் | B. டாமி டக்ளஸ்

C. வில்ஹெல்ம் ரோன்ட்ஜென் | D. எட்வர்ட் ஜென்னர்

Human insulin was first discovered by

A. Fredrick Banting | B. Tommy Douglas | C. Wilhelm Rontgen | D. Edward Jenner

39. கருவுறுதலுக்குப் பின் சூற்பை எதுவாக மாறுகிறது?

A. மலர் | B. பழம் | C. சூல் | D. இதழ்கள்

After fertilization the ovary develops into

A. Flower | B. Fruit | C. Ovules | D. Petals

40. மானிய விலையில் சானிட்டரி நாப்கின்களை வழங்குவதற்கான மாதவிடாய்ச் சுகாதாரத் திட்டம் சுகாதார அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட ஆண்டு

A. 2015 | B. 2010 | C. 2011 | D. 2014

The menstrual hygiene scheme to provide subsidized sanitary napkins was launched by the health ministry in

A. 2015 | B. 2010 | C. 2011 | D. 2014

41. பின்வருவனவற்றைப் பொருத்து

1. ஆட்டோசோம்கள்	–	a. டிரைசோமி 21
2. இருமயநிலை	–	b. 9:3:3:1
3. அல்லோசோம்கள்	–	c. 22 ஜோடி குரோமோசோம்கள்
4. டவுன் நோய்க்கூட்டு அறிகுறி	–	d. 2n
5. இருபண்புக் கலப்பு	–	e. 23 ஜோடிகுரோமோசோம்கள்

A. adecb B. bdeac C. dcbea <u>D. cdeab</u>

Match the following

1. Autosomes	–	a. Trisomy 21
2. Diploid condition	–	b. 9:3:3:1
3. Allosomme	–	c. 22 pair of chromosomes
4. Down's syndrome	–	d. 2n
5. Dihybrid ratio	–	e. 23 pair of chromosomes

A. adecb B. bdeac C. dcbea <u>D. cdeab</u>

42. ---- நோய் ஒற்றை ஜீனில் ஏற்படும் திடீர் மாற்றத்தால் ஏற்படுகிறது

A. தலசீமியா <u>B. கதிர் அரிவாள் இரத்தசோகை</u>

C. லுகேமியா D. ஹீமோபிலியா

------ is caused by the mutation of a single gene

A. Thalassemia <u>B. Sickle cell anemia</u> C. Leukemia D. Hemophilia

43. ஒரு உயிரினத்தில் காணப்படும் சிதைவடைந்த மற்றும் இயங்காத நிலையிலுள்ள உறுப்புகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A. ஹாலோபைல்ஸ் B. சைக்ரோபில்ஸ் <u>C. வெஸ்டிஜியல் உறுப்புகள்</u> D. எதுவுமில்லை

The degenerated and non-functional organs found in an organism are called

A. Halophiles B. Psychrophiles <u>C. Vestigial organs</u> D. None

44. பாரம்பரிய அறிவின் மூலம் உள்ளூர்த் தாவரங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் பற்றி அறிவது எவ்வாறு அறியப்படுகிறது?

A. தொல்தாவரவியல் <u>B. வட்டார இனத்தாவரவியல்</u>

C. பொருளாதார தாவரவியல் D. பேலியோனாலஜி

The study of local plants and their uses through the traditional knowledge is known as

A. Paleobotany <u>B. Ethnobotany</u> C. Economic botany D. Palynology

45. ஒன்று போல் உள்ள DNA விரல் ரேகை யாரிடம் காணமுடியும்?

<u>A. ஒற்றைக்கரு இரட்டையர்கள்</u> B. பெண் குழந்தைகள்

C. வேறுபட்ட இரட்டையர்கள் D. ஆண் குழந்தைகள்

Similar DNA finger printing is obtained for

A. Identical twins
B. Female infants
C. Non-identical twins
D. Male infants

46. புரதம் நிறைந்த கோதுமை வகை

A. HS 420
B. Atlas 66
C. RAJ 3765
D. VL 719

A protein rich wheat variety is

A. HS 420
B. Atlas 66
C. RAJ 3765
D. VL 719

47. IDDM என்பதன் விரிவாக்கம்

A. உள் சார்ந்த நீரிழிவு நோய்
B. இன்சுலின் சார்ந்த நீரிழிவு நோய்
C. இன்சுலின் குறைக்கும் நீரிழிவு நோய்
D. பரம்பரை சார்ந்த நீரிழிவு நோய்

Expand IDDM

A. Inter Dependent Diabetes Mellitus
B. Insulin Dependent Diabetes Mellitus
C. Insulin Deducing Diabetes Mellitus
D. Inherited Dependent Diabetes Mellitus

48. பின்வரும் அறிக்கைகளில் எது / எவை சரியானது?

1. அளவுக்கதிகமாக உண்ணுகின்ற ஒவ்வொரு 7 கலோரி உணவிலும் 1 கி கொழுப்பு உடலில் சேகரமாகி உடல்பருமன் அதிகரிக்க வழிவகுக்கிறது.
2. சராசரி உடல் எடையை விட 40%க்கும் அதிகமான எடை கொண்டவர் அதிக எடை உடையோர் மற்றும் 50% - க்கும் அதிகமாக எடை கொண்டவர் உடல்பருமன் உடையோர் எனப்படுவர்.

A. 1 மட்டும்
B. 2 மட்டும்
C. இரண்டும் 1 & 2
D. எதுவுமில்லை

Which among the following statement is/are correct?

1. Every 7 calories of excess consumption leads to 1 gm fat deposit and increase in body weight.
2. An adult weighing 40% more than the standard weight is OVER WEIGHT and 50% more is OBESE.

A. 1 only
B. 2 only
C. Both 1 & 2
D. None

49. வனவிலங்கு புகைப்படக் கலைஞராகச் சர்வதேசப் புகழ்பெற்ற முதல் இந்தியப் பெண்மணியார்?

A. ராதிகா ராமசாமி
B. சுதிர் சிவராம்
C. ஜெயந்த் சர்மா
D. கரிகில்

Who was the first Indian women to strike an international reputation as wildlife photographer?

A. Rathika Ramasamy
B. Sudhir Shivaram
C. Jayanth Sharma
D. Gauri gill

விடைகள்: அடிக்கோடிட்டவை

ஃபார்முலா 4 கார் பந்தயம்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்,
01.09.2024 அன்று சென்னையில் நடைபெற்ற ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக் போட்டிகளில், ஃபார்முலா 4 இந்தியன் சாம்பியன்ஷிப் பிரிவில் இரண்டாம் சுற்றில், முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீரர்களுக்கு பரிசுக் கோப்பை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: R.Pugazh Vendhan at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,